பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

மங்கள வைபவங்களுக்கேற்ப, உடுபுடைவைகள்

ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட் உட்புறம்
யாழ்ப்பாணம்.

உதயன்

விலை ரூ 2. 50

★ காஞ்சிபுரம்
★ பெனாரஸ்
★ கெவி தஞ்சாவூர்
★ பாட்லி
★ பட்டுவேஷ்டிகள் மற்றும் சகலவிதமான

பிளவ்ஸ் பீஸ் வகைகளுக்கும்

ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட் உட்புறம்
யாழ்ப்பாணம்.

கூர்: 4 விபவ ஞு மார்கழி மீ 22 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1409 ஜ அவ்வல் பிறை 26 (06-01-1989) UTHAYAN -A LIVELY TAMIL DAILY கதிர்: 38

★ வடக்கு, கிழக்கில்

ஈழவர் முன்னணி 5 மாவட்டத்தில் சுயேச்சையாக போட்டி

யாழ்ப்பாணம், ஜனவரி 6

ஈரோஸின் அரசியல் பிரிவான ஈழவர் ஜனநாயக முன்னணி வடக்கு, கிழக்கில் உள்ள ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும் சுயேச்சையாகப் போட்டியிடுகிறது-

யாழ்ப்பாணம், திருகோணமலை தேர்தல் மாவட்டங்களில் போட்டியிடும் ஈழவர் ஜனநாயக முன்னணி சுயேச்சைக் குழுவின் வேட்பாளர் பட்டியல்கள் நேற்று அந்தந்தப் பகுதிக் கச்சேரிகளில் தாக்கல் செய்யப்பட்டன.

வன்னி,மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் போட்டியிடுவோரின் பட்டியல்கள் அந்தந்தப் பகுதி செயலகங்களில் நேற்றுத் தாக்கல் செய்யப்படுவதாக இருந்தது.

இக்குழுவின் யாழ் மாவட்ட வேட்பாளர் பட்டியலில் இடம் பெறுவோர் விவரம் வருமாறு:-

திரு. செபஸ்தியாம்பிள்ளை எட்வேட், திரு. சின்னத்தம்பி சிவமகாராசா, திரு. இளையதம்பி இரத்தினசபாபதி, திரு. இளையகம்பி பரராசசிங்கம், திரு அருணாசலம் பொன்னையா இராசையா, திரு. தியாகராசா புவனசுந்தரராசா, திரு. செல்லத்துரை பரராசசிங்கம், திரு. சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை, திரு. கணபதிப்பிள்ளை தில்லைநாதன்.

திரு. கணபதி செல்வநாயகம், திரு. தம்புயோகநாதபிள்ளை, திரு. ஜோசப் - ஜோர்ஜ் இராசேந்திரம், திரு. மாணிக்கம் சுந்தரமூர்த்தி, திரு. சபாரத்தினம் சிவானந்தராசா.

நேற்றுக் காலையே மேற்படி குழு கட்டுப்பணம் செலுத்தி நியமனத்திற்கான விண்ணப்பத்தைப் பெற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

(ஒ-5-10)

திருகோணமலையிலும் வேட்புமனு தாக்கல்

கொழும்பு ஜன 6

திருகோணமலை தேர்தல் மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஜக்கிய தேசியக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழவர் ஜனநாயக முன்னணி ஆகியன வேட்பாளர் பட்டியல்களை தாக்கல் செய்துள்ளன.

கூட்டணி தலைமையான நான்கு அமைப்பு முன்னணியில் உள்ள ரெலோவின் சார்பில் ஒரு தமிழ்ப் பெண் போட்டியிடுகின்றார்.

செல்வி திலகம் செல்வமணி வடிவேல் இவர் ஆவர். வயது 52.

இந்தக் கூட்டணியில் போட்டியிடும் இன்னொரு வேட்பாளர் திருமலையின் முன்னாள் எம்.பியும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உபதலைவருமான திரு. இரா. சம்பந்தனும் ஆவார்.

(ஒ-எ)

சத்தியப்பிரமாணம் செய்ய முஸ்லிம் காங்கிரஸ் விதிக்கும் நிபந்தனை!

மட்டக்களப்பு, ஜன. 6

கிழக்கு மாகாணத்தில் வாழும் 33 சதவீத முஸ்லிம்களுக்கு சட்டபூர்வமான பாதுகாப்புக்கு உத்தரவாதம் கிடைக்கும்வரை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மாகாண சபை உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் செய்யமாட்டார்கள்.

அக்கட்சியின் தலைவர் ஜனாப் எம். எச். எம். அஷ்ரப் மட்டக்களப்பு மாவட்டத்தில் பொதுத் தேர்தல் பிரசாரக் கூட்டங்களை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் இத்தகவலைத் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை சாத்தான்குடி, ஏறாவூர், ஒட்டமாவடி ஆகிய இடங்களில் இக் கூட்டங்கள் நடைபெற்றன.

அவர் மேலும் கூறியதாவது:-

தமிழ் அரசியல் கட்சிகள் சில ஆயுதங்களை வைத்திருக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

ஆனால் முஸ்லிம்களுக்கு பாதுகாப்பு இல்லை. இதற்காக நாம் சட்ட விரோதமாக ஆயுதம் வைத்திருக்க விரும்பவில்லை. சட்டரீதியான பாது

(8 ஆம் பக்கம் பார்க்க)

ஈரோஸ் பாலகுமாரன் போட்டியிடவில்லை

இரத்தினசபாபதி தலைமை

யாழ்ப்பாணம், ஜன 6

ஈரோஸ் இயக்கத்தின் முக்கிய பிரமுகர் திரு. வே. பாலகுமாரன் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடவில்லை

ஈழவர் ஜனநாயக முன்னணியின் சுயேச்சைக்குழு தாக்கல்செய்த எந்தப் பட்டியலிலும் அவரது பெயர் இடம் பெறவில்லை.

ஈழவர் ஜனநாயக முன்னணி சுயேச்சைக் குழுவாகப் போட்டியிடுவதால் இதன் சார்பில் தேசிய ரீதியாக யாரேனும் தெரிவு செய்யப்படுவதற்கும் வாய்ப்பு இல்லை.

ஆகவே தேசிய ரீதியாகத் தெரிவாவோரின் பட்டியலின் மூலமும் திரு. பாலகுமாரன்தேர்ந்தெடுக்கப்படுவதற்கும் வாய்ப்புகள் இல்லை.

இதேசமயம் ஈரோஸ் இயக்க ஸ்தாபகரும் முன்னாள் பத்திரிகையாளரும், புகழ்பெற்ற பொருளியல் நிபுணருமான திரு. இ. இரத்தினசபாபதி மேற்படி சுயேச்சைக் குழுவின் யாழ் மாவட்டப் பட்டியலில் இடம்பெறுகிறார்.

இவரேவடக்கு-கிழக்கு மாகாண ஈ ஜ முன்னணி சுயேட்சைக் குழுவுக்குத் தலைமை வகிப்பார் என்று ஈரோஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-5)

இந்திரா கொலை வழக்கு:

2 எதிரிகளுக்கும் இன்று தூக்கு!

புதுடில்லி. ஜன 6

இந்திரா காந்தியைக் கொலைசெய்த குற்றத்திற்காக சத்வன்சிங், கேஹர்சிங் ஆகியோருக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனை இன்று வெள்ளிக்கிழமை நிறைவேற்றப்படும்.

இன்று காலை 8மணிக்கு திஹார் சிறையில் மரணதண்டனை நிறைவேற்றப்படும் என்று சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன

இரண்டாவது கருணை மனுவும் ஜனாதிபதியினால் நிராகரிக்கப் பட்டதைத் தொடர்ந்து கேஹர்சிங் சார்பில் வழக்கறிஞர் ஹத்மலானி தாக்கல் செய்த மனுவை புது டில்லி உயர் நீதிமன்றம் நேற்று நிராகரித்துவிட்டது.

இரண்டு எதிரிகள் மீதான மரணதண்டனையை நிறைவேற்றும் படியும் உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

இதேவேளை புதுடில்லியில் இருந்து திஹார் சிறை வரையான பாதை (20 மைல) முழுவதும் ஆயுதம் தரித்த பொலீஸார் காவல் புரிந்து வருகின்றனர்.

பஞ்சாப் மாநிலத்தி

(8-ஆம் பக்கம் பார்க்க)

கேஹர் சிங்கை மனைவி சந்தித்தார்

புதுடில்லி ஜன 6

கேஹர் சிங்கை, அவரின் மனைவி நேற்று முன்தினம் திஹார் சிறை சென்று சந்தித்தார்.

15 நிமிடங்கள் இடம் பெற்ற இச்சந்திப்பின் போது, கேஹர் சிங், "எனது இறுதி நாள் நெருங்கி விட்டது. கவலைப்படாதீர்கள்" என்று மனைவிக்கு ஆறுதல் கூறினார்.

கேஹர் சிங்கின் வீட்டில் அவரின் மனைவி, உறவினர்கள் அழுத வண்ணம் இருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

(ஒ-எ)

சுபநேரம்

6 - 1 - 1989
மார்கழி 22
வெள்ளிக்கிழமை

சுபநேரம்:
6.31 முதல் 8.01 வரை
ராகுகாலம்:
11.01 முதல் 12.31 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

வடபகுதிக்கு மின்சாரம்

திருத்த வேலைகள் இன்னும் முற்றாக முடியவில்லை

யாழ்ப்பாணம், ஜன. 6

மதவாச்சி 'ரம்பாவ' மின் கோபுர திருத்த வேலைகள் முடிவடைந்து விட்டன. யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற மின்சார சபை ஊழியர்கள் இன்று யாழ்ப்பாணம் வந்து சேர்வர்.

எனினும் வடபகுதிக்கு எதிர்வரும் பத்தாம் திகதிக்கும் பன்னிரெண்டாம் திகதிக்கும் இடையிலேயே மின்சார விநியோகம் கிடைக்கும் என மின்சார சபை உயரதிகாரி ஒருவர் நம்பிக்கை தெரிவித்தார்.

மதவாச்சிக்கு அருகேயுள்ள 'ரம்பாவ' மின் கோபுரம் திருத்தப்பட்டுள்ள போதிலும் களுத்தாவவுக்குச் சமீபமாக வுள்ள மின் கோபுர திருத்தவேலைகள் முடிவடையாததன் காரணமாகவே வடபகுதிக்கான மின் விநியோகம் தாமதமடைகிறது.

இதேசமயம் ஹபரணையில் உள்ள மின் கோபுரமும் திருத்த வேலைகளும் முடிக்கப்பட்டுள்ளன.

களுத்தாவப் பகுதியில் நூற்றுக்கணக்கான ஊழியர்கள் திருத்த வேலையில் ஈடுபட்டிருப்பதனால் 12 ஆம் திகதிக்கு முன் வடபகுதிக்கான மின்சாரம் கிடைத்துவிடும் என்று அந்த அதிகாரி தெரிவித்தார்.

(ஒ-10)

அரசஅதிபரின் விளக்க அறிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 6

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியின் ஐந்து மாடிக் கட்டட வேலைகள் சென்ற வருடத்தில் நடைபெறாது போனது சம்பந்தமாக யாழ். அரசாங்க அதிபர் திரு. வை. மு. பஞ்சலிங்கம் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

27 - 12 - 1988 ஆம் திகதிய உதயனில் பிரஸ்தாப ஐந்து மாடிக் கட்டடம் சம்பந்தமான செய்தி ஒன்று வெளிவந்திருந்தது.

அரசாங்க அதிபரின் விளக்க அறிக்கை ஞாயிறு உதயனில் வெளிவரும். (அ)

இராணுவ அதிகாரி வீடு மீது தாக்குதல்

இராணுவ அதிகாரி சார்ஜண்ட் மேஜர் ஜயசிங்காவின் வீட்டின் மீது கடந்த செவ்வாய் நடத்தப்பட்ட தாக்குதலில் அவரின் தாய், தம்பி, தங்கை ஆகியோர் கொல்லப்பட்டனர்.

ஜெயசிங்காவும் அவரின் இன்னொரு சகோதரரும் காயமடைந்தனர்.

ரி - 56 ரைபிள்களுடன் வந்த இனந் தெரியாத நபர்களே இத் தாக்குதலை நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது. (உ எ)

தமிழ் பகுதிக்கு 50 புதிய பஸ்கள்

மிக விரைவில் கிடைக்கும்

கொழும்பு, ஜனவரி 6

வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு மிகவிரைவில் புதிதாக ஐம்பது பஸ்கள் கிடைக்கவிருக்கின்றன.

இந்திய அரசு இலங்கைக்கு நன்கொடையாக வழங்கவிருக்கும் இருநூறு புதிய பஸ்களில் ஐம்பதே வடக்கு, கிழக்கிற்கு அனுப்பி வைக்கப்படும் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை அரசு இந்த ஐம்பது பஸ்களையும் வடக்கு, கிழக்குமாகாண சபையிடம் ஒப்படைக்கும் என்று தெரியவருகிறது.

இந்த பஸ்கள் கொழும்பில் வந்திறங்கியதும் வடக்கு, கிழக்குமாகாண சபையின் நிர்வாக நகரமான திருகோணமலைக்கு அவை அனுப்பி வைக்கப்படும்.

இந்த பஸ்களை பின்னர் வடக்கு, கிழக்கில் இயங்கும் பிராந்திய போக்குவரத்துச் சங்கங்களிடம் ஒப்படைப்பதா அல்லது—

இந்த பஸ்களை வைத்துக் கொண்டு தனியான போக்குவரத்துச் சேவை ஒன்றை மாகாண சபையே ஆரம்பிப்பதா என்பது குறித்து மாகாணசபை நிர்வாகம் இன்னும் முடிவு செய்யவில்லை என்று தெரிகிறது. (உ)

ஓர் இந்தியப்படை பிரிவு நேற்றுத் திரும்பியது!

மற்றையது ஞாயிறன்று

கொழும்பு, ஜன 6

இந்திய அமைதிப் படையின் ஒரு பட்டாலியன் நேற்று வாபஸ் வாங்கப்பட்டது.

இப்படை எம். வி. அக்பர் கப்பல் மூலம் திருகோணமலையில் இருந்து நேற்று இந்தியா புறப்பட்டது

இரண்டாவது பட்டாலியன் வருகிற ஞாயிறு இலங்கையை விட்டு புறப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது

இதனிடையில் இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் வி என் சர்மா இலங்கையின் வடக்கு—கிழக் குமாகாணத்துக்கு 3 நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு வந்தார்.

அவருடன் இந்திய அமைதிப்படையின் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஏ. எஸ். கல்கத்தும் வந்திருந்தார். (உ-எ)

யாழ்ப்பாணத்தில் இந்தியத் தளபதி

யாழ்ப்பாண,ம் ஜன 6

இந்திய இராணுவத் தலைமைத் தளபதி திரு வி. என். சர்மா நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்தார்.

அவர் அமைதிப்படையின் உயர் அதிகாரிகளுடன் இன்றைய நிலைமைகள் குறித்துப் பேச்சு நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ

ஆனந்தராஜா இணைப்பதிகாரி

கொழும்பு. ஜன 6

திருகோணமலை மாவட்ட இணைப்பதிகாரியாக சிரேஷ்ட பொலீஸ் அதிபர் ரி. ச. ஆனந்தராஜா ஜனவரி முதலாம் திகதியில் இருந்து நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்பதவியில் நியமிக்கப்பட்ட முதலாவது தமிழர் இவராவார்.

(உ-எ)

ரயிலில் 1,050பயணிகள்

யாழ்ப்பாணம், ஜன 6

ஆயிரத்து ஐம்பது பயணிகளுடன் யாழ்தேவி ரயில் நேற்றுக்காலை 9-30 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்குப் புறப்பட்டது.

[உ-10]

முச்சந்தி முரளி

அமைச்சர்மாரின்பதவி பறிபோயும் பாவம் அவையளுக்கு நிம்மதியில்லை பாருங்கோ.....!

முன்னாள்மாவட்டஅமைச்சர் வீட்டின் மீது தாக்குதல்

புத்தளம் மாவட்ட அமைச்சராகப் பணியாற்றிய யாப்பஹுவா முன்னாள் எம். பி. திரு. வன்னி நாயக்காவின் வாசஸ்தலம் மீது கடந்த செவ்வாய்க்கிழமையன்று இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தினர்.

காவலுக்கு நின்ற ஒருவர் அதில் காயமடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ-ஐ)

அரச ஊழியர்களுக்கு

சம்பள உயர்வு 1988 ஜனவரியிலிருந்தே

யாழ்ப்பாணம், ஜன. 6

அரச ஊழியர்களுக்கு கடந்த வருடம் அங்கீகரிக்கப்பட்ட சம்பள உயர்வின் இரண்டாவது பகுதித் தொகை 1988 நவம்பருக்குப் பதில் 1988 ஜனவரி தொடக்கம் அமுலுக்கு வரும்.

இதற்கான சுற்று நிருபம் பொது நிர்வாக அமைச்சினால் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அடுத்த வாரமளவில் சுற்று நிருபம் சகலதிணைக்களங்களுக்கும் அனுப்பி வைக்கப்படும் என்று நம்பிக்கையாக அறிய வந்துள்ளது.

1987 ஆம் ஆண்டு பட்ஜெட் உரையின் போது அப்போதைய நிதி அமைச்சர் திரு. ரொனி டி மெல் அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வு குறித்து அறிவித்திருந்தார்.

எனினும் சம்பள அதிகரிப்பு இரண்டாக பிரிக்கப்பட்டு ஒரு பகுதி 88 ஆம் ஆண்டும், அடுத்த

(8-ஆம் பக்கம் பார்க்க)

இளைய கலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரம்

பாவித்த வீட்டுத் தளபாடங்கள் கட்டில், மெத்தைகள், கசெற், றேடியோ, குக்கர், மெஷின், Oven, சண்ணாடி மேசை, Show Case, ஹோல் செற், மேசைகள் சாப்பாட்டுமேசை அலுமாரி, மற்றும் பல பொருள்களும் உடன் விலை விலையில் 164, றெம்பிள் ரோட், நல்லூர் கோயில் பின் வீதியில் (8574)

நவீன முறையில் கடைச்சல் வேலைப்பாடு அமைந்த பிள்ளைத் தொட்டில் சிலிப்பூட்டப்பட்டது உடன் விற்பனைக்குண்டு 164, றெம்பிள் ரோட், நல்லூர் கோயில் பின் வீதியில். (8575)

பாவித்த தளபாடங்கள், கட்டில்கள், Drawing room sets, Chriso, cabinet, Dressing table Wheel chair, Baby cot, Dinner-coffee set, Revolving book case, Wardrobe, Dressing table, Brass ware Eversilver things, Fan Sanyo குளிர் சாதனப்பெட்டி மற்றும் பல பொருட்கள் விற்பனைக்குண்டு. Parasakthy Press, 81 K K.S Road Kokuvil. (8779)

பாவித்த Suzuki GS 125, 87 Sri விற்பனைக்கு உண்டு தொடர்பு, Atlas Institute, ஆடியபாதம் ரோட், திண்ணவேலி. (8604)

வெள்ளை நிற Love-Birds விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு 12, நல்லூர்குறுக்கு வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (8591)

குடியிருப்புக் காணி விற்பனைக்கு

காரைநகர் வலந்தலையில் இந்துக் கல்லூரி, ஆஸ்பத்திரி, தபாற் கந்தோர் ஆகியவற்றிற்கு அண்மையில் நல்ல தண்ணீர், நல்ல சுற்றாடல் குடிநீருடன் காணி விற்பனைக்கு உண்டு, பிரித்தும் கொடுக்கப்படும். தொடர்பு: No 22 C/o உதயன், யாழ்ப்பாணம். 8605

இறைச்சிக் கோழிகள்

புறொயிலேஸ், கல்பேட்ஸ், இறைச்சிக் கோழிகள் புது வருடத்தை முன்னிட்டு விலை குறைத்து விற்பனை செய்கின்றோம். தொடர்பு:- சோமாட்டி, ஸ்பாம் ஸ்ரேசன் ரோட், மயிலங்காடு சுன்னாகம் (8765)

தேவை

இடியப்ப வேலையில் அனுபவம் உள்ளவரும் மற்றும் வெயிற்றர்வேலையில் அனுபவம் உள்ள ஆட்களும் தேவை, தொடர்பு கொள்க, றிக்கோ ஹோட்டல், 370 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம். 8786

யாழ் நகரில் இயங்கிவரும் ஆடைகளை தயாரிக்கும் தொழிற்சாலைக்கு பயிலுனர். உதவியாளர்கள் தேவை. [பெண்கள் மட்டும்] 25 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும் தொடர்பு 418 C/O உதயன் (8777

எமது தொழிற்சாலையில் வேலை செய்வதற்கு பெண்பிள்ளைகள்தேவை. சான்றிதழ் பிரதிகளுடன் வரவும். எஸ் சுப்பிரமணியம் & கொம்பனி 34 ஆடியபாதம் வீதி, நல்லூர் மாக்கற் அருகாமையில் நல்லூர். யாழ்ப்பாணம். C/1205

தேவை

கேற்கிறில் வேலை செய்ய அனுபவம் உள்ளவர்களும் ரிங்கர் வேலையில் அனுபவம் உள்ளவர்களும் தேவை. தொடர்பு: K சிவலிங்கம், 77 மாவிப்பாய்வீதி, யாழ்ப்பாணம். 8782

மணமகள் தேவை

காங்கேசன்துறையை வசிப்பிடமாகக்கொண்ட இந்து சமய, வயது 37 சொந்த தொழில் வியாபாரம் செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை வரவாகத்து பெற்றவரும் விண்ணப்பிக்கலாம் சீதனம் எதிர்பார்க்கப்படும். 417. மே/பா உதயன். (8776)

வெளிநாடு அழைத்துப்போக 35 வயது உடைய வேளாளர் இன மணமகனுக்கு தையல் தேர்ச்சி உள்ள பெண் தேவை, ஜாதி கவனிக்கப்படமாட்டாது, சீதனம் இல்லாவிட்டால் எதிர்பார்க்கப்படமாட்டாது, முழு விபரத்துடன் படமும்இணைத்து தொடர்பு: தாரணிரதி கூல் ஸ்பொட் (ஆஸ்பத்திரி முன்) மானிப்பாய் 8778

காணவில்லை

அருளானந்தம் கலாநிதி ஆயிரநாள் எனது 688430208 V இலக்க முடைய அடையாள அட்டையைத் தவறவிட்டுவிட்டேன் கண்டு எடுத்தவர்கள் சோதி ரெக்ஸ்ரைல்ஸ் இல, 14 நவீனசந்தை யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். 8774

பொன்னர் சுப்பிரமணியம் குடும்ப உணவு முத்திரைகள் 7 தவறிவிட்டது (கதுமலை கூப்பன் கடை) கண்டு எடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (8775)

4 வயதுடைய சாம்பல் அல்லது நலரரிற உள்ளூர் பசு ஒன்று 1-1-89 முதல் காணவில்லை, தகவல் தரவும், சன்மானம் உண்டு, தொடர்பு: கண்டக்டர் பொன்னுத்துரை, அம்மன் கோவிலடி, நந்தாவில், 8595

தேசிய வீடமைப்புத் திணைக்களம் யாழ்ப்பாணத்தில் கடமைபுரியும் எனது மோட்டார் சைக்கிள் (Benly Super) Honda திருடுப் போய் விட்டது இல 10 Sri 7284 சறுப்புநிறம். தகவல் தருபவர்களுக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும். தகவல்: பொ. பரராசசிங்கம் (8781)

தவறிவிட்டது

என்னுடைய மோட்டார் சைக்கிள் சாவி Jaffna Electricals கடைச் சாவி கோர்வையுடன் ரச்சேரியடியில் 5-1-89 தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கண்டிக்குளி சபாலதிபரிடம் கொடுத்து சன்மானம் பெற்றுக்கொள்ளவும் நன்றி. தம்பையா ஆறுமுகம். (8607)

சின்னையா சிவபாக்கியம் அ. அ. லெக்கம் 345481833V, சின்னையா நகுலேஸ்வரி அ. அ. இல, 678040444V ஆகியஇரண்டும் 3-1-89 மாதகல் மினிபஸ்ஸில் தவறிவிட்டன கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும், சன்மானம் வழங்கப்படும். 8599

AL இரசாயனம் 89

108 Brown Road. A/L 89 இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ் சனி, ஞாயிறு ஆரம்பம் 7-1-89 சனி 3—6 p.m Physical 3—4 p.m. Organic 4—5 p.m. Inorganic 5—6p.m. (8768)

வகுப்புகள்

A/L இரசாயன நூல் வெளிவந்து விட்டது ஆசிரியர் சத்தீஸ் பௌதீக இரசாயனம் பகுதி II நேரில் பெறுவோர்க்கு விஷேட கழிவு கரப்படும். (8767)

குறுகியகால விசேட தொழில்நுட்ப பயிற்சிகள் Radio T.V Air Condition Refrigeration வயறிங், வெல்டிங், லைன்டிங், பிளமிங், மோட்டமெக்கானிசம் Typing Spoken English புதியபிரிவுகள் ஆரம்பமாகின்றன அனுபவமுள்ள விரிவுரையாளரால் கற்பிக்கப்பட்டு பெறுமதியான சான்றிதழகள் வழங்கப்படும். Vispa Engineering Aid Hall 328, நாவலர் வீதி, (ஆனைப்பந்திக்கு அருகாமையில்), யாழ்ப்பாணம். (8581

AL 89 இரசாயனம்

108 Brown Road, ஆசிரியர் சத்தீஸ் மீட்டல் வினாவிடை வகுப்புக்கள் ஆரம்பம் 9-1-89 திங்கள் 7 30 a.m (திங், செவ், புதன், வியா, வெள்ளி 7 30—8.15 a m. (8773)

கோதிட மாந்திரீக நிபுணர்

நினைத்த காரியம், ஜாககபலன், எண் சோதிடம் தொழில் விருத்தி, மங்களவாழ்வு, மனையில்இலக்குமிகடாட்சம், சத்துரு ஜெயம், சிரகதோஷம் முதலான மாந்திரீக விடயங்களுக்கும் நாடுங்கள் 'சக்தி சரவணு' (அரசாங்க அங்கீகாரம் பெற்ற சோதிடரும், மட்டக்களப்பு பாரம்பரிய-பரம்பரை மாந்திரீக நிபுணரும்) 210 கல்லூரி யார்வீதி, [யாழ்/ இந்துக் கல்லூரி மைதானத்துக்கு முன்பாக] யாழ்ப்பாணம். 8784

திருவாசகம் ஓதுவதால் தெய்வீக சிந்தனை வளரும்

சாவகச்சேரி ஜன 6 திருவாசகம் ஓதுவதால் தெய்வீக சிந்தனை வளரும். திவ்யஜீவனபக்குவமும் ஏற்படும்.

ஆத்மஜோதி ஆசிரியர் திரு நா. முத்தையா மட்டுவில் கல்வத்து சிவன் கோவிலில் இடம்பெற்ற திருவாசக மற்றோதல் நிகழ்ச்சியில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

ஆண்களும், பெண்களும் பிள்ளைகளுமாக நூற்றுக்கும் அதிகமானோர் பங்குபற்றிய இந்நிகழ்ச்சியில் அவர் தொடர்ந்து பேசும் போது மேலும் கூறியதாவது: இறை நம்பிக்கையும் இதய தூய்மையும் வளர திருவாசகம் தனித்தும் கூட்டாகவும் தினமும் ஓதுதல் விரும்பற்பாலது

நாளாந்த நிகழ்ச்சிகளில் திருவாசக ஓதல் ஓர் அம்சமாக இடம் பெறல் வேண்டும்.

தவறின் வாரந்த நடைமுறையிலாவது ஆரம்பமாக மேற்கொள்ளலாம்.

திருவாசகம் கல்மனதையும் கனியவைக்கும் தன்மையது என்பது அருளாளர்கள், அறிஞர்கள் கருத்தாகும். பிற நாட்டவர்களும் இதனைப் பாராட்டுகின்றனர்.

திருவாசகத்துக்கு வேறொருவாசகமும் ஈடாகாது என்பார்கள்.

அத்தனை சிறப்பும் பெருமையும் வாய்ந்தது திருவாசகம்.

இப்படி அவர் கூறினார். (ச-31)

ஹரன் சினிமாவில்

கடைசி 3 தினங்கள்

தினசரி 10.30 - 2 30 - 4.45

A LIFE OF NINJA

பயங்கரச் சண்டைக் காட்சிகள் நிறைந்த படம் சினிமாஸ்கோப்,

9 முதல்

TO LIVE AND DIE IN LOS ANGELES.

(8814)

NEW SCIENCE ACADEMY

B. M. C. முன்பாக

89 A/L

WEEKEND CLASS

PHYSICS

REVISION BATCH

LIGHT

கோள மேற்பரப்பில் ஒளிமுறிவு, வில்லைகள்

By

S, சோதிலிங்கம்

B. Sc (Special)

ஆரம்பம்:- 7. 1. 89

SAT 1.30 p. m

(1217)

பருத்தித்துறை நகராட்சிமன்றம்

வழக்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்தல் - 1989

01. பின்வரும் பொருட்களையும் சேவைகளையும் வழங்குவதற்குப் பருத்தித்துறை நகராட்சி மன்றத்துடன் தங்களைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் வழங்குநர்கள், உற்பத்திபாளர்கள், ஒப்பந்தக்காரர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. விண்ணப்பங்கள், அவை அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்தல்- 1989' என்று குறிப்பிட்டுச் 'செயலாளர், நகராட்சிமன்றம், பருத்தித்துறை' என முகவரி இடப்பட்டு 1989ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாகக் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு அமைவாகப் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

03 ஒவ்வொரு இனப் பொருட்களுக்கும் சேவைகளுக்கும் தனித்தனியாக விண்ணப்பங்களுடன் கீழ்க்காட்டப்பட்ட வைப்புப் பணங்களையும் சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

04 சாதாரணமாக இந்நகராட்சி மன்றத்துடன் பதிவு செய்து கொண்ட வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்களிடமிருந்தே கேள்விகள் கோரப்படும். எனினும் அவசியமேற்படின் ஏனைய வழங்குநர்களிடமிருந்தும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்தும் கேள்விகள் கோரவும் கொள்வனவு செய்யவும் பருத்தித்துறை நகராட்சி மன்றத்தின் செயலாளருக்குப் பூரண உரிமையுண்டு.

05 பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களும் ஒப்பந்தக்காரர்களும் வேண்டப்படும்போது சேவைகள் சமர்ப்பிக்கவோ அன்றேல் சட்டங்களை நிறைவேற்றவோ தவறும் பட்சத்தில் அல்லது வழங்கும் பொருட்கள் பைரக் கூறாகட்கு அல்லது மாதிரிகட்கு அமையாதவிடத்தும் குறித்த வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்களின் பெயர்கள் பதிவேட்டிலிருந்து நீக்கப்படுவதுடன் வைப்புப் பணமும் பறிமுதல் செய்யப்படும்.

06 அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியன பதிவுச் சட்டணமும் வைப்புப் பணமும் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன.

பொருட்கள், சேவைகள் பற்றிய விபரம்	வைப்புப் பணம்	பதிவுச் சட்டணம்
பொது		
01. எழுதுகருவிவகைகள், காகிதாதிகள், அலுவலக உபகரணங்கள் வழங்குதல்	100/-	50/-
02. அச்சிடும் வேலைகள் செய்தல், வாரனமிருக வரித் தகடுகள் வழங்குதல்	100/-	50/-
03. வேலைப்பகுதிக்கான கல், மண், ஊரி போன்றன வழங்குதல்	500/-	100/
04. கைவண்டிகள், மலகூட வண்டிகள், தளபாடங்கள் வழங்குதல், திருத்துதல், டிராக்டருக்கான [போட்] உதிரிப்பாகங்கள் வழங்குதல், திருத்துதல்.	200/-	50/-
05. சோலவுடைகள், மழை அங்கிகள் பாதணிகள் வழங்குதல்	100/-	50/-
மின்சாரம்		
06 மின்சாரப் பகுதிப் பொருட்கள் வழங்கல்	500/-	100/-
07. வலுவூட்டப்பட்ட கொங்கிறீற் மின்கம்பங்கள் வழங்கல்.	500/-	100/-

க. சண்முகநாதன்
செயலாளர்,
நகராட்சி மன்றம், பருத்தித்துறை

நகராட்சிமன்ற அலுவலகம்,
பருத்தித்துறை.
29 - 12 - 1988.

கமரன் சினிமாவில்

கடைசி 3 தினங்கள்

தினசரி 10.30 - 2 30 - 4.45

A LIFE OF NINJA

பயங்கரச் சண்டைக் காட்சிகள் நிறைந்த படம் சினிமாஸ்கோப்,

9 முதல்

TO LIVE AND DIE IN LOS ANGELES.

(8814)

Commerce Academy

Ist Lane, Power House Road, JAFFNA

A/L 89 கலை. வர்த்தகம்

துரித மீட்டல்

வினாவிடை - வகுப்பு

Weekend - Class

ஆரம்பம்:- 07 - 0 - 1989

சனி 11.30 a.m

அளவையியல் — சந்திரராஜா
Sat, Sun - 11 30

பொருளியல் — சின்னத்தம்பி
Sat, Sun 12 30

வர்த்தகம் — தேவா - பகுதி II
விஸ்வநாத் பகுதி I
Sat, Suu 1.30

கணக்கியல் — யோகராஜா
Sat, Sun - 10 00

கம்பனி

ஆரம்பம்:- 07 - 0 - 1989

சனி 10 00 a m

(C-1216)

16 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிரியை அழைப்பும்

தோற்றம்:
17-04-1950

மறைவு:
22-12-1988

அமரர்
இராசையா இராஜேந்திரம்

[பிரபல நீபோறிங் கடைச்சல் தொழிற்சாலை உரிமையாளர் கோண்டாவில்]

எங்கள் குடும்பத்தின் திருவுருவாய் அறிவின் சுடரொளியாய், பாசத்தின் பிறப்பிடமாய், குடும்பத்தின் ஒளிவிளக்காய், எமக்கொல்லாம் ஒளி வீசி இடையில் எம்மையெல்லாம் ஆழுத்துயரில் ஆழ்த்திவிட்டகன்ற எங்கள் அன்புத் தெய்வமே உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகிறோம்.

அன்னாரின் இல்லத்தில் இன்று (6-1-89) வெள்ளிக்கிழமை நடைபெறும் வீட்டுக் கிரியைக்கரும காரியங்களில் பங்கு கொள்ளும்படி உற்றார், உறவினர், நண்பர்களைத் தயவாக கேட்டுக்கொள்ளுகிறோம்.

அன்புடன்,
தாய், மனைவி,
மக்கள்.

மிசன் பாடசாலை வீதி,
கோண்டாவில்.

[8809]

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுகிருத்திகை அழைப்பும் நன்றிநவிலலும்

(6-1-1989)

உயர்திரு சின்னத்தம்பி சேனாதிராசா

(கதிர் விரோர்ஸ், ஒட்டுகுட்டான், R. S அரிசி ஆலை, மல்லாகம், கந்தன் றேடர், தெல்லிப்பளை ஆகியனவற்றின் உரிமையாளரும் அரசாங்க ஒப்பந்தகாரரும்.)

தோற்றம்: 5-11-1938 மறைவு. 7-12-1988

8-12-88ஆம் திகதி அன்னாரது இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டு இறுதி அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், பல வழிகளிலும் உதவி நல்கிய உறிரூர், உறவினர், நண்பர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

06-01-1989ஆம் திகதி வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டிகரண கிரிகைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உறிரூர், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்:

8ஆம் கட்டையடி,
தெல்லிப்பளை. (8810)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லைப் புறங்களில் 4,000 சிங்களப்படையினர்

கொழும்பு, ஜன. 6

வடக்கு – கிழக்கு மாகாணத்தில் எல்லைப் புறச் சிங்களக் கிராமங்களுக்குப் பாதுகாப்பளிக்க இலங்கை பாதுகாப்புப் படையைச் சேர்ந்த சுமார் 4 ஆயிரம் பேர் நிறுத்தப்படுவர்

தொண்டர் படை, துணைப்படை, ஊர்காவல் படை ஆகியவற்றில் இருந்தே இந்த 4 ஆயிரம் பேரும் தெரிவு செய்யப்படுவர்.

[ஒ-எ]

BECON 156/3ஸ்ராஸ்லி வீதி. யாழ்ப்பாணம்.

A/L 90

கலை, வர்த்தகம் பிரிவு -5

பொருளியல் — வரதராஜன்
வர்த்தகம் — ரட்ணம்
அளவையியல் — S. S. மனோரன்
கணக்கியல் — மரியதாஸ்
தமிழ் — செல்வி. மீரா
இந்து நாகரிகம் — ஜோதீஸ்வரன்
புவியியல் — இக்னேசியஸ்
அரசியல் — சுந்தரமூர்த்தி

ஆரம்பம்:

7-1-89 சனி 10.00 a.m.

(C/1056)

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி – யாழ்ப்பாணம்

A/L 89 DAY CLASS

புதிய பிரிவு ஆரம்பம் 9-1-89

பொருளியல் — குமாரவேல்
கணக்கியல் — ஸ்ரீ
வர்த்தகம் — தேவா
அளவையியல் — சயந்தன்
புவியியல் — குணராஜா
தமிழ் — குழந்தை
இந்துநாகரிகம் / இந்திய வரலாறு — அருள்நங்கை
அரசியல் — குமார்

AL 90 ஆம் ஆண்டிற்கான புதிய பிரிவும் ஆரம்பமாகின்றது,

நிர்வாகி

(1065)

கல்விச்சேவை நியமனங்களில் இ. த. ஆ. சங்கம் அதிருப்தி

கவலை தெரிவித்துத் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜன 6

சமீபத்தில் வெளிவந்த ஸ்ரீலங்கா கல்விச்சேவை இரண்டாம் தர பதவி உயர்வில் வடமாகாணத்தைச் சேர்ந்த எவரும் தெரிவாகவில்லை என்பதை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் மிகுந்த கவலையுடன் நோக்குகின்றது. இது தமிழர் ஆசிரியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி என்றும் கருதுகின்றது. இதே போன்று அதிபர் தரம் 1, II III பதவி உயர்வில் வடமாகாணத்தில் பலர் தகுதியிருந்தும் பதவி உயர்வு பெறும் வாய்ப்பை இழந்துள்ளனர் இரண்டு பதவி உயர்வுகள் பற்றியும் கல்வி அமைச்சுடன் பேசி பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு கிடைக்க இ. த. ஆ. சங்கப் பொதுச்செயலாளர் நடவடிக்கைஎடுக்க வேண்டும்

சமீபத்தில் கூடிய இ. த. ஆ. சங்க யாழ் மாவட்ட நிர்வாகிகள் கூட்டத்தில் மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பற்றி யாழ் மாவட்டப் பிரசாரச் செயலாளர் திரு. ந. சிவபாதம் அறிக்கை ஒன்றை வெளிப்பிட்டுள்ளார்.

ஒத்திவைக்கப்பட்ட அதிபர் தரம் 1, 2, 3. பரீட்சையை மேலும் காலம் தாழ்த்தாது நடத்த வேண்டும்

பல வருடங்களாக வசதிக்கட்டண ஆசிரியர் நிரந்தர நியமனமின்றி இருப்பதை புதிய ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவின்கவனத்திற்குக் கொண்டு வந்து ஆவன செய்ய வேண்டும்.

வன்செயலால் பாதிக்கப்பட்டோர் இருவருட சம்பள முற்பணத்தை கல்வித் திணைக்களம் கொடுக்கும் போது விண்ணப்பங்கள் கிடைத்த அடிப்படையில் எவருக்கும் முன்னுரிமை அளிக்காது கொடுபட ஆவன செய்ய வேண்டும்.

மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

இ. த. ஆ சங்க யாழ் மாவட்டக் கூட்டம் மாவட்டத் தலைவர் திரு பி. வின்சண்ட் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்துக்கு மேற்படி சங்கப் பொதுச் செயலாளர் திரு. தா. மகாசிவமும் சமுகமளித்திருந்தார் [இ]

இலவசப் பாடநூல்கள்

பருத்தித்துறை, ஜன. 6

நாகர்கோவில், உடுத்துறை. உடுப்பிட்டி, வரணி ஆகிய கொத்தணிப் பாடசாலைகளுக்குரிய இலவச பாடநூல்கள் வந்து சேர்ந்துள்ளன.

நூல்கள் யாவும் முதலாந்தவணையின் முதல் வாரத்தில் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(தி 118)

அட்டகிரி சைவ வித்தியாசாலையை கஷ்டப்பிரதேச பாடசாலையாக மாற்றுமாறு கோரிக்கை

கொக்குவில் ஜன 6

நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலையை கஷ்டப் பிரதேசப் பாடசாலைஆக்குமாறுஇப்பாடசாலை அபிவிருத்திச் சபையினர் யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளருக்கு விண்ணப்பித்துள்ளனர்.

மானிப்பாய் தேர்தல் தொகுதியில் அமைந்துள்ள இப் பாடசாலை தோட்டங்களும். வயல்களும் சூழ்ந்த நவாலி வடக்கு நடுக்கிராமத்தில் அமைந்துள்ளது

இப்பகுதியிலும் இதனை அடுத்துள்ள கட்டுடைக் குடியேற்றப் பகுதியிலுமுள்ள பிள்ளைகளின் நன்மை கருதி, இலங்கை சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் இப்பகுதி சைவப் பெரியார்களால் இப் பாடசாலைஆரம்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது

இதனால் இப்பகுதி மாணவர்கள் வெள்ளப் பெருக்கு, பெருமழை, காற்றுக் காலங்களிலும் தம்படிப்பைத் தொடரக் கூடியதாகவுள்ளது.

இப்பாடசாலைஆரம்பிப்பதற்கு முன் இப்பகுதி மாணவர்கள் இரண்டு மைல்களுக்கப் பாலுள்ள பாடசாலைகளுக்குச் சென்றே தம் கல்வியைக் கற்று வந்தனர். பலர் இடை நடுவிலும் தம் கல்வியை நிறுத்த வேண்டி ஏற்பட்டது.

ஆனால் இப்பாடசாலை தொடங்கியதும் மாணவர்கள் தம் கல்வியைத் தொடரக் கூடியதாக இருந்தாலும் கஷ்டமான சூழலில் இப் பாடசாலை அமைந்திருப்பதால் பலவித கஷ்டங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது. (இ-69)

இரும்புக் கதிரைகள்

மண்டைதீவு, ஜன. 6

மண்டைதீவு மகாவித்தியாலயத்துக்கு புதிய இரும்புக்கதிரைகள் யாழ் கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளன. (ச 88

மயிலிட்டி தெற்கு – வீமன்காமம்:

81 குடும்பங்களுக்கு வீடமைப்புத் திட்டம்

மயிலிட்டி தெற்கு வீமன்காமம் பகுதியில் 81 குடும்பங்களைக் குடியமர்தத்கூடியதான வீடமைப்புத் திட்டம் ஒன்றை உருவாக்க நோர்வே செஞ்சிலுவைச் சங்கம் முன்வந்துள்ளது.

இப்பகுதியில் ஏற்கெனவே அமைக்கப்பட்டிருந்த வீடமைப்புத் திட்டம் இராணுவ நடவடிக்கைகளின் போது தரைமட்டமாக்கப்பட்டது.

இதனால் இங்கு குடியிருந்தமக்கள் குடியிருக்க வழியின்றி மிகவும்கஷ்ட நிலையில் இருப்பதால் இங்கு 81 குடும்பங்களைக் குடியமர்த்தக் கூடியதாக வீடமைப்புத் திட்டம் ஒன்றை உருவாக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

இந்த வீடமைப்புத் திட்டத்தை உருவாக்க முன்வந்துள்ள நோர்வே செஞ்சிலுவைச் சங்கத்துக்கு இந்த வீடமைப்புத் திட்டம் குறித்து ஆய்வு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்க வலிவடக்கு உதவி அரசஅதிபர் திரு. எஸ், இராசையா வலிவடக்கு பிரஜைகள் குழுக்களின் ஒன்றியச்செயலாளர் திரு எஸ் மகாசிவராசா அப்பகுதிக் கிராமசேவையாளர், ஆய்வு நிறுவன அதிகாரிகள் ஆகியோரைக் கொண்ட குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இக்குழுவின் ஆய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டவுடன் வீடமைப்புத் திட்ட வேலைகள் ஆரம்பமாகுமெனத்தெரிவிக்கப்படுகிறது.

(இ-68)

குருதேவர்
சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள்

ஜயந்தி விழா

திருவருளை முன்னிட்டு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (8 – 1 – 89) அன்று மாலை 4 00 மணிக்கு ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டத்திலும், திங்கட்கிழமை (9 - 1 – 89) அன்று காலை 5.00 மணிக்கு ஸ்ரீ சாந்திலிங்கேஸ்வரர் திருக்கோயிலிலும் இவ் விழா கொண்டாடப்படும்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:

ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டச் சைவச் சிறுவர்கள்.

ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டம்,
பழைய வீதி, கோப்பாய்.

(8576)

I. A. B.

Foundation — 9 - 198
Inter — 6- 1- 1989
and
Finals — 6- 1- 1989

புதிய வார நாள் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

NORTH CEYLON TECHNICAL INSTITUTE

14, St Peters Lane
Hospital Road,
Jaffna.

(C/1085)

WHEN YOU WANT TO OPEN THE RIGHT DOORS
IN SRI LANKA
REMEMBER

SHABRA

We have proved Stability
We have shown Honesty
We are very much Advanced
We have the most Backing
We are so Reliable
Thats why we are on the move Ahead

For more details please contact:

Shabra Unico Finance Limited

207, Power House Road,
JAFFNA.

ஓம் நமோ நாராயணாய

அஞ்சனைச் செல்வ போற்றி! அநும எம் ஐய போற்றி!
நெஞ்சினில் இராம நாமம் நிறைந்திடும் நிமல போற்றி!
சஞ்சலம் தவிர்ப்பாய் போற்றி! சற்குருநாதா போற்றி!
தஞ்சமென் றடைந்த பேரை முப்போதும் காப்பாய் போற்றி!

ஆஞ்சநேய சுவாமி ஜயந்திப் பெருவிழா

வண்ணைமாநகர்
ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில்
எழுந்தருளியிருக்கும்
அருள்மிகு ஸ்ரீ ஆஞ்சநேய சுவாமியின்
ஜயந்தி தினத்தை முன்னிட்டு
சுவாமிக்கு மகா அபிஷேகமும் திருஉலா உற்சவமும்
07 - 01 - 89 சனிக்கிழமை
நடாத்தப்பெறும்

அன்றையதினம் தேவஸ்தான மகா மண்டபத்தில்
மாலை 4. 30 மணிக்கு

"கம்பன் கண்ட அநுமன்"
பற்றி
அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர்
இ. ஜெயராஜ் அவர்கள்
செஞ்சொற் பெருவிருந்து வழங்குவார்

ஆஞ்சநேயப் பெருமான் அருள் அமுதமும்
அவன்புகழ் எடுத்து இயம்பும் ஜெயராஜ் அவர்களின
தமிழ் அமுதமும் ஒருங்கே அருந்திட பக்தகோடிகள்
திரண்டு வருகை தந்திடுக!

வணக்கம்

ஜயந்தி உற்சவ உபயகாரர்

(C/1086)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பல் மூலம் காங்கேசன் வந்த அகதிகள்

யாழ்.ஒஸ்மானியா, சென்.சார்ள்ஸ்

கல்லூரிகளில் சமுகமளிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன 6

இந்தியாவில் இருந்து கப்பல்மூலம் காங்கேசன் துறை வந்த அகதிகளில் பெரியகடை, கொட்டடி, நாவாந்துறை சோனகத்தெரு ஆகிய கிராம சேவை அலுவலர் பிரிவில் தங்கியுள்ளவர்கள் 7ஆம் திகதி சனிக்கிழமை ஒஸ்மானியாக் கல்லூரியில் காலை 9மணிக்கு சமுகமளிக்க வேண்டும்.

இதேபோல் கொழும்புத்துறை, ஈச்சமோட்டை, குருநகர் கிழக்கு, குருநகர் மேற்கு, அத்தியடி, கண்டிக்குளி, யாழ்ப்பாணப் பட்டினம் ஆகிய கிராம சேவை அலுவலர் பிரிவுகளில் தங்கியுள்ளவர்கள் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு செண்சார்ள்ஸ் மகாவித்தியாலயத்திலும் சமுகமளிக்க வேண்டும்.

குடும்பத்தலைவர் அல்லாத வேறு ஒருவர் இந்தியா சென்றிருந்தால் அவர் குடும்பத் தலைவருடன் வரவேண்டும்

இவ்வாறு யாழ் அரசாங்க அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வரும்பொழுது இந்திய அரசினால் வழங்கப்பட்ட பதிவு அட்டை, தேசிய அடையாள அட்டை, அகதிகளுக்கான அடையாள அட்டை, கிராமசேவை அலுவலர்களால் மீள்குடியமர்த்தல் நிவாரணம் பெறுவதற்கான அறிமுகஅட்டை என்பனவற்றைக் கொண்டு வரவேண்டும்

என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-5]

இராஜகோபுரம்

புங்குடுதீவு, ஜன. 6

புங்குடுதீவு 43 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள கந்தசுவாமி கோயிலின் முகப்பில் பல இலட்சம் ரூபா செலவில் இராஜகோபுரம் அமைக்கப்படுகிறது. (ச-131)

இலங்கை வங்கியின் கலண்டரில்------

யாழ்ப்பாணம், ஜன. 6

இலங்கை வங்கியின் ஐம்பதாவது ஆண்டு நிறைவை ஒட்டி வெளியிடப்பட்ட 1989 ஆம் ஆண்டு தமிழ்க் கலண்டர் தப்புத் தவறாக வெளியிடப்பட்டுள்ளது.

திங்கட்கிழமைக்கு அடுத்ததாக செவ்வாய்க்கிழமை வரவேண்டிய இடத்தில் வெள்ளிக்கிழமையும், வெள்ளிக்கிழமையின் இடத்தில் செவ்வாய்க்கிழமையும் இடம் பெற்றுள்ளன.

ஏனைய இரு மொழிகளிலும் சரியாக அச்சிடப்பட்டிருந்த போதிலும் தமிழில் மட்டும் தவறு ஏற்பட்டிருப்பது இலங்கை வங்கியின் தமிழ் ஊழியர்கள் மத்தியில் பெரும் அச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

12 மாதங்களிலும் இந்தத் தவறு தொடர்ந்துள்ளது.

தமிழ் என்றால் தவறு விட்டாலும் பரவாயில்லை என்று கொழும்பில் உள்ள வங்கித் தலைமையகம் நினைத்துவிட்டதோ? [இ-10]

மீண்டும் வேலையில் சேர்க்கக் கோரிக்கை

மண்டைதீவு ஜன 6

வேலணை பெரும் தெருக்கள் திணைக்களத்திலிருந்து இடை நிறுத்தி வைக்கப்பட்ட ஊழியர்களை மீண்டும் வேலைக்கு சேர்த்துக் கொள்ளுமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

1984 ஆம் ஆண்டு பிரஸ்தாப திணைக்களம் விதி அபிவிருத்தி அதிகார சபையாக மாறியதைத் தொடர்ந்தே இந்த ஊழியர்கள் வேலையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களுள் பல ஊழியர்கள் இன்னும் எதுவித வேலையும் இல்லாது கஷ்டப்படுகின்றார்கள்.

இது தொடர்பாக யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்தை தொழிலாளர்கள் சார்பில் தூதுக்குழு ஒன்று சந்தித்து இந்த வேண்டுகோளை விடுக்கவிருக்கின்றது. (இ 88)

கிளிநொச்சி மாவட்டத்தில்:

வீடுகளை புனரமைக்க நன்கொடை

வட்டக்கச்சி ஜன 6

கிளிநொச்சி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களை மீள்குடியமர்த்துவதற்காக 2 ஆயிரம் ரூபாவும்பாதிக்கப்பட்ட வீடுகளைப் புனரமைப்புச்செய்நற்கு 15 000 ரூபாவும் நன்கொடையாக வழங்கப்பட்டு வருகின்றது.

தற்போது கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் 6000 குடும்பங்களுக்கும் பூநகரி பளை ஆகிய உதவி. அரசாங்கஅதிபர் பிரிவின் கீழ் 2600 குடும்பங்களுக்கும் நிவாரணமாக தலா ரூபா 2000/- வழங்கப்பட்டுள்ளது

இந் நிவாரணம் கிளிநொச்சி மாவட்டத்தில் இன்னும்25 000 குடும்பங்களுக்கு வழங்கப்பட வேண்டும் எனத் தெரிகிறது

இம்மாவட்டத்தில் பாதிப்படைந்த வீடொன்றுக்கு ரூபா 15000/ நன்கொடையாக வழங்கப்படும். அதன் முதற் கட்டமாகப் பளை, பூநகரி ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இப்பணம் வழங்கப்பட்டுள்ளது

கரச்சிப் பிரிவில் 1700 வீடுகளுக்கு இந்நிவாரணம் வழங்கப்படும்.

மீள்குடிபேற்றத்துக்கான நிவாரணம் பெறும் விண்ணப்பப் படிவம் இன்றும் வட்டக்கச்சி இராமனாதபுரம் கல்மடுநகர் ஆகிய இடங்களுக்கு வழங்கப்படவில்லை என்று இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (ச)

ப. நோ.கூ. சங்கத்துக்கு புதிய லோறி

புதுக்குடியிருப்பு ஜன 6

புதுக்குடியிருப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு லொறி ஒன்றை அரசாங்க அதிபர் திரு. க. பொன்னம்பலம் ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தி திட்ட நிதியில் இருந்து கொள்வனவு செய்து கொடுத்துள்ளார்.

இச்சங்கம் இதே அரசாங்க அதிபரால் 1987 ஆம் ஆண்டுபுதிதாக ஆரம்பிக்கப்பட்டு, பல இழப்புக்களுக்கும் அழிவுகளுக்கும் மத்தியில் இலாபத்தில் இயங்கி வருகிறது.

கூட்டுறவுத் தொழிலாளர் சட்டங்களுக்கு அமைய அதன் ஊழியர்களுக்கு உரிய சம்பளங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. (ச-126)

புராணங்கள் படிக்கிறோம்; அவற்றின் ஆசிரியர்களை நினைவு கூருவது குறைவு

மானிப்பாய், ஜன 6

''கோயில்களில் நாம் கந்தபுராணம் படிக்கிறோம். திருவாதவூரடிகள் புராணம் படிக்கிறோம் ஆனால் அவற்றின் ஆசிரியர்களான கச்சியப்பசுவாமிகளையோ, மாணிக்கவாசக சுவாமிகளையோபெற்ற இவ்விழாவில் நாம் நினைவு கூருவது குறைவு. அவர்களை நினைவு கூர்ந்து அவர்கள் காட்டிய சமய நெறிகளை கடைப்பிடித்தல் அவசியம்.''

உடுவில் ஸ்ரீசிவஞானப் பிள்ளையார் கோயிலில் சிவஞான வாரியத்தின் ஆதரவில் நடைபெற்ற சமய விழாவில் பேசிய ஆத்மஜோதி ஆசிரியர் நா. முத்தையா மேற்கண்டவாறு கூறினார்.

சிவஞான வாரிய தலைவர் பிரம்மஸ்ரீ வாமுத்துக்குமாரசாமி சர்மா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. முத்தையா மேலும் கூறியதாவது.

அறம் செய்ய விரும்பு புண்ணியம் செய்வதற்கு முதலில் மனம் வேண்டும். தினமும் நாம் உண்ணும் அரிசியில் ஒரு கைப்பிடி அரிசி எடுத்துச் சேர்த்தால் குறிப்பிட்ட காலத்தில் பெருந் தொகை அரிசியை சேர்க்க முடியும். அதனை தானமாக வழங்கி புண்ணியம் தேடலாம்.

இப்படி அவர் கூறினார்.

அகில இலங்கை சச்சியப்பசிவாச்சாரிய சுவாமிகள் மன்றத்தின் செயலாளர் சைவசித்தாந்த பண்டிதர் திரு. நா. கனகரத்தினம் பேசுகையில் 'சமய குரவர்கள் நாம் செய்ய வேண்டிய சமயப்பணிகளையும் தொண்டுகளையும் தாமே செய்து காண்பித்துள்ளனர். அவர்கள் வழி நின்று எமது இளைஞர்களும் சமயப்பணிகளையும் தொண்டுகளையும் ஆலயங்களில் கூச்சமின்றிச் செய்ய முன்வர வேண்டும். நாம் செய்யும் தொண்டுகள் யாவும் இறைவனுக்கு செய்யும் தொண்டுகளே'' என்றார். (சி-90)

தவறிவிழுந்து மரணம்

விமானக்குண்டு வீச்சினால் நிரந்தரமாக ஊனமுற்றிருந்த ஒருவர் கிணற்றில் தண்ணீர் அள்ளும் போது தவறி விழுந்து மரணமானார்.

நல்லூர் சிவன் புதுவீதியைச் சேர்ந்த திரு. எஸ் கந்தசாமி 38 வயது என்னும் மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு பரிதாபமரணத்தைத் தழுவிக் கொண்டவராவார்.

இவர் விமானக்குண்டு வீச்சினால் கால் ஊனமுற்றிருந்த நிலையிலும் தோட்டப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டிருந்தார்.

சம்பவதினம் பயிர்களுக்கு மருந்து அடிப்பதற்கு தண்ணீர் அள்ளுகையிலேயே அவர் தவறி விழுந்து நீரில் முழ்கி மரணமானார். (இ-69)

போர்த்துக்கேயர் வருகையின் பின்பே முறைசார்ந்தகல்வி ஆரம்பம்எனத்தகவல்

கொக்குவில், ஜன,6

'போர்த்துக்கேயர் வருகையின் பின்பே பாடசாலைகள் மூலம் முறைசார்ந்த கல்வி போதிக்கப்படத் தொடங்கியது என்பது வரலாறு. ஏட்டுக்கல்வியைத் தான் கல்வி என்று சிலர்நினைக்கிறார்கள். நூல் சார்ந்த கல்வி மட்டுமே கல்வி என்பது தவறு கல்வி என்பது பரந்து பட்டது.

யாழ் கல்வித் திணைக்களப் பிரதம கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற தொழிற்திறன் அபிவிருத்திக் கல்விக் கருத்தரங்கில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

ஐக்கிய நாடுகள் நிதி உதவியுடன் யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களம் முறைசாராக் கல்விப்பிரிவினரால் நடத்தப்பட்ட இக்கருத்தரங்குக்கு கல்வி அதிகாரி திரு. ச. சுப்பிரமணியம் தலைமை வகித்தார்.

முறைசாராக் கல்வியின் தேவையும் முகாமைத்துவமும் என்னும் தலைப்பில் திரு. கு. சோமசுந்தரம் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

'கல்வியை நாம்மூன்று வகைகளுள் அடக்கலாம் முறைசார்ந்த கல்வி, முறைசாராக் கல்வி முறையில கல்வி என்பனவே அவை.

ஆதிகாலத்திலிருந்து அண்மைக் காலம்வரை முறையில் கல்வி மூலமே பிள்ளைகள் கற்றுவந்தனர்.

பாடசாலைகளில்முறை சார்ந்த கல்வி மூலம் கற்கத்தொடங்கு முன பிள்ளை தம்தேவையைப் பூர்த்திசெய்ய அழுகறிகிறது, தவழக் கறகிறது நிற்க, நடக்கக் கறகிறது, இது முறையில் கல்வி எனப்படுகிறது.

பாடசாலைகளில் முறை சார்ந்த கல்வி கற்கும் அதேவேளை முறையில் கல்வியும் தொடர்கிறது. மேலைத்தேசங்களில் பால் கல்வி முறைசார்ந்த கல்வியாகப் போதிக்கப்படுகிறது. ஆனால் கீழைத் தேசங்களில் முறையில் கல்வி மூலமே இதனை அனேகர் கற்கின்றனர்.

அறிவு, ஆற்றல் திறன்களை முன்னோர் கற்றது முறையில் கல்வி மூலம் தான் குருகுல முறையும் ஒருவகையில் முறையில் கல்வியே.

பெற்றோரிடமிருந்தோ உறவினரிடமிருந்தோ தொழில்களைக் கற்று நடத்திவந்தனர். இவை ஒழுங்குபடுத்தப் பட்டு, பாடவேளைகளில் கல்வி கற்பிக்கப் பட்டவில்லை. இலங்கையில் போர்த்துக்கேயர் வருகையின் பின்பே ஒழுங்குபடுத்தப் பட்ட பாடசாலைக்கல்வி அதாவது முறைசார்ந்த கல்வி புகுத்தப்பட்டது,

ஐநா சபையின் கீழ் உள்ள யுனெஸ்கோ. கல்வி எப்படிதிட்டமிடப் படவேண்டும் எனக் காலத்திற்குக்காலம் ஆய்வுகளை மேற்கொண்டது.

அவர்களின் சிபார்சிலேதான் முறைசாராக் கல்வியும் புகுத்தப்பட்டது முறைசாராக் கல்வியும் முறைசார்ந்த கல்வியோன்றே முகாமைத்துவம், கட்டமைப்பு, ஒழுங்கமைப்பு கொண்டதாக வுள்ளது, முறைசாராக் கல்விகு இது ஒன்றும் தேவையில்லைஎன்ற தப்பபிப்பிராயம் நிலவி வந்தது. அது நிவர்த்தி செய்யப் பட்டுவிட்டது

முறைசார்ந்த கல்வி போலன்றி முறைசாராக் கல்வியில் நெகிழ்ச்சித் தன்மையுண்டு முறைசாராக் கல்வி கற்பதற்கு மாணவர்களுக்கு வயதுக் கட்டுப்பாடு இல்லை.

கற்பிப்பவர்களுக்கும் வயதுக் கட்டுப்பாடுகள் இல்லை ஓய்வு பெற்ற ஆசிரியரின்சேவையையும் பயன்படுத்தலாம் இதில் ஈடுபடுபவர்களுக்குச் சுதந்திரம் உண்டு

இப்படி அவர் கூறினர் (இ-69)

நிவாரணப் பட்டியல் தாமதமாவதாகப் புகார்

மீள்குடியமர்தல் நிவாரணம் ரூபா ஆயிரத்தைப் பெறுவதற்கு வங்கிகளால் வெளியிடப்படும் பட்டியல் அவ்வப் பகுதிக் கிராம சேவையாளர்பிரிவுகளுக்கு தாமதமாக வந்து சேர்வதால் பலர் நிவாரணத்தை உரிய நேரத்தில் பெற முடியாது உள்ளது.

சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் கொடுப்பனவுக்குத் தெரிவு செய்யப் படுபவர்களின் பட்டியல் கனை புதன்கிழமைக்கு முன்னதாக கிராம சேவையாளர்கள் பிரிவுகளில் பார்வைக்கு வைப்பது மூலம் இப் பிரச்சனையைத் தீர்க்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-51

★ தரமான கலர்ப் படப்பிரதிகள் ★

★ அதிகுறைந்த கட்டணத்தில்
★ மிகக் குறுகிய காலத்தில்

கலர்ப்படச் சுருள் கழுவுதல் முற்றிலும் இலவசம்

நவீன கம்பியூட்டர் இயந்திரத்தில் பிரதி செய்தல் 3 முதல் 5 நாட்களில் விநியோகம்

ஷுப்ருவை நாடுங்கள்

ஷ ப் ரு

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண் 21017.8

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

நவரத்தினசிங்கம் கிருபாகரன்

அன்னையின் மடியில்: 07 – 02 – 1965 ஆண்டவன் அடியில்: 06 – 01 – 1988

உன் ஆத்ம சாந்திக்காக என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
உன் நினைவால் வாடும்

அப்பா, அம்மா, அண்ணாமார், அக்கா, அத்தான், மருமக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

புதுச்செம்மணி வீதி,
நல்லூர் வடக்கு, (கல்வியங்காடு)
யாழ்ப்பாணம். (8603)

முதல் ஆண்டு நினைவு அஞ்சலி



திரு. விநாயகர் நாகலிங்கம்
(ஓய்வு பெற்ற P W D ஓவசியர்)

தோற்றம்: 17.12.1913 மறைவு 16.12.1987

திதி: 06.01.1989

அன்புடன் எவர்க்கும் அருள்மொழி கூறியே
நன்நெறி காட்டும் ஞானியாகத்
''திருமுருகாற்றுப் படையினைத்'' தினமும்
ஓதி உணர்ந்து உலகில் பலரும்
பயன் பெற வாழ்ந்த பண்பினை
நின் நினைவே துணையாய் நின்னையே எண்ணி
வாழ்கிறோம் வாழ்த்தி வணங்கி
நிற்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இளவாலை வடக்கு,
இளவாலை. (8813)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் பிரச்சினைக்குரிய தீர்வில் தாயகக் கோட்பாட்டுக்கு முக்கிய இடம்

தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் இதனைக் கவனத்தில் கொள்ளவேண்டும்

பொதுத் தேர்தல் வருகிறது.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான புதிய யோசனைகள் மக்கள் முன் வைக்கப்பட்டிருந்தன.

அந்த யோசனைகளில், முக்கியமாக தமிழர் தாயகம் பற்றிய விடயத்தைப் பொறுத்தவரையில் ஒவ்வோர் கட்சியினதும் நிலைப்பாடு வித்தியாசமானதாகவே அமைந்திருந்தது.

எனவே இந்நிலையில் இனப்பிரச்சினைக்கான தீர்வில் தமிழர் தாயகம் பற்றிய விடயம் இடம் பெற வேண்டியதன் முக்கியத்துவம் பற்றி சற்று ஆராய்தல் பொருத்தமானதாகும்.

அந்நியர் இந்நாட்டைக் கைப்பற்றுவதற்கு முன்பாக, இந்நாட்டில் கோட்டை கண்டி இராச்சியங்களைக் கொண்ட சிங்களப் பாரம்பரிய பிரதேசமும், யாழ்ப்பாண இராச்சியத்தைக் கொண்ட தமிழர் பாரம்பரிய பிரதேசமும் இருந்ததை யாவரும் அறிவர். எனினும் நாட்டை கைப்பற்றியஅந்நியர்கள் அவற்றை ஒரே நிர்வாகத்தின்கீழ் கொண்டுவந்து ஆட்சி புரிந்தனர்.

1948இல் இந்த நாட்டிற்கு சுதந்திரம் வழங்கிய போதும் ஒரே நிர்வாக அமைப்பின் அடிப்படையிலேயே ஆட்சியை ஒப்படைத்தனர்.

அதன் காரணமாகவே பெரும்பான்மையினரான சிங்கள மக்கள் நாடு முழுவதையும் ஆளக்கூடிய வாய்ப்பு உருவாகியது. அந்நேரத்தில் தமிழ் மக்கள் தமது இழந்த ஆட்சியை மீண்டும் அமைப்பதனை கருத்தில் கொள்ளாமல் சிங்கள மக்களுடன் ஒன்றாகச் சேர்ந்து வாழ முற்பட்டனர்.

எனினும் பதவிக்கு வந்த சிங்கள அரசாங்கங்களின், சிங்களக் குடியேற்றம், சிங்கள மொழிச்சட்டம் போன்ற இனவாத நடவடிக்கைகளால் பாதிப்படைந்த தமிழ்மக்கள் தமது பிரதேசத்தில் ஓர் சமஷ்டி அமைப்பை ஏற்படுத்தும் பொருட்டு அகிம்சை வழிப் போராட்டத்தைத் தொடக்கினர்.

ஆயினும் அப்போராட்டங்கள் நசுக்கப்பட்டதாலும், புதிய அடக்கு முறைகள் ஏற்படுத்தப்பட்டதாலும் 1976இல் அவர்கள் தனிநாட்டுக் கோரிக்கையை முன் வைக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

ஆரம்பத்தில் அகிம்சை வழியிலான இப் போராட்டம் பின்னர் ஆயுதப் போராட்டமாக மாறியதுடன், சர்வதேச அரங்கில் ஓர் முக்கிய இடத்தை வகிக்கக் கூடியதாகவும் அமைந்தது.

எனவே தமிழ்மக்களினது இந்தத் தனிநாட்டுக் கோரிக்கைக்கு மாற்றுத்திட்டமாகவும் அதே நேரத்தில் ஐக்கிய இலங்கையின் கீழ் அமையக் கூடியதுமான எந்த ஒரு திட்டமும் முக்கியமாக தமிழ்மக்களின் பாரம்பரிய பிரதேசத்தை ஏற்றுக்கொள்ளக்கூடிய தாகவே இருக்க வேண்டும்.

திம்பு மாநாட்டில்

இதனையே 1985இல் திம்பு மாநாட்டில் பங்கு பற்றிய சகல இயக்கங்களும் ஓர் முக்கியமான கோரிக்கையாக முன் வைத்தன.

எனவே ஐக்கிய இலங்கையின் கீழ் இனப்பிரச்சினைதீர்க்கப்பட வேண்டுமெனில் தமிழ், சிங்கள பாரம்பரிய பிரதேசங்களுக்கு தனித்தனியான [இரு] மாநில சபைகள் உருவாக்கப்படுவதுடன், அவற்றிற்கென பொதுவான மத்திய அரசாங்கமும் அமைக்கப்பட வேண்டும்.

அதேவேளையில் இவ்விரு பிரதேசங்களில் வாழும் ஏனைய சிறுபான்மை இனங்களான முஸ்லிம் மக்கள் இந்திய வம்சாவளித் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அம்மாநிலங்களின் கீழ் நீதியானதும், சமத்துவமானதுமான முறையில் தீர்வு காணப்படவேண்டும்.

அதாவது முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரை தமிழர் பிரதேசத்தின் அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் மக்கள் பரந்த பிரதேசத்தில் செறிவாக வாழ்கின்றபடியால் அப்பிரதேசத்தை உள்ளடக்கிய ஓர் பிராந்திய முஸ்லிம் சுய அமைப்பை தமிழ் மாநிலத்தின் கீழ் ஏற்படுத்த வாய்ப்பு உண்டு. அதேவேளை தமிழ் பிரதேசத்தின் ஏனைய பகுதிகளில் வாழ்ந்துவரும் முஸ்லிம் மக்களுக்கு விகிதாசார முறையின் கீழ் அல்லது யாதேனும் நீதியான முறையில் தீர்வினைக் காணலாம்.

இவ்வாறு சிங்களப் பிரதேசத்தில் பரவலாக வாழ்கின்ற முஸ்லிம் மக்களது பிரச்சினைக்கு, சிங்கள மாநில சபையின்கீழ் ஏற்றதொரு தீர்வினைக் காணமுடியும்

அவ்வாறே இந்திய வம்சாவளி மக்களினதும் பிரச்சினைக்கு தமிழ், சிங்கள மாநில சபையின்கீழ் அவர்களது எண்ணிக்கை வாழ்கின்ற பிரதேச அமைப்பு போன்றவற்றின் அடிப்படையில் நீதியான தீர்வினைக் காணவேண்டும்.

ஈழத் தமிழினம் ஏனைய சிறுபான்மை இனங்களைப் போல் அல்லாது இந்நாட்டின் ஒரு பகுதியை ஆட்சி புரிந்த அரசாற்றுப் பின்னணியைக் கொண்டுள்ளது. இப்பின்னணியின் அடிப்படையிலேயே சமஷ்டி முறை அல்லது தனி நாட்டை அமைப்பதற்கான கோரிக்கைகள் நியாயப்படுத்தப்பட்டன.

இறுதியாக இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு ஒவ்வொரு கட்சியால் தெரிவிக்கப்படும் யோசனைகளில் அதிகாரப் பங்கீடு போன்ற விடயங்களில் வேறுபாடு காணப்பட்டாலும் தமிழர் பாரம்பரிய பிரதேசம் பற்றிய விடயத்தில் எந்தவொரு சருத்து வேறுபாடும் இருக்க முடியாது என்று கூறலாம்.

எனவே பொதுத் தேர்தலில் பங்கு பற்றும் அரசியல் கட்சிகள் இதுவிடயத்தில் தக்க கவனம் செலுத்தாவிடில் தமிழர் பிரச்சினையைத் தீர்த்து வைப்பது கஷ்டமாகி விடும்.

-நிருன்

வாழை நட்டு தோரணம் கட்டி சிகரம் வைத்துக் கூட்டம்!

முந்திய காலத்து தேர்தல் சுவைகள்

1989 பொதுத் தேர்தலுக்குவேட்பாளர் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்வதற்கான கடைசி நாள் இன்று.

கடந்த பத்துக்கு மேலான ஆண்டுகளாக இலங்கை மக்கள் ஒரு நூற்றாண்டில் கூடக் காணாத கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்ந்துள்ளனர். அடுத்தடுத்து இடைவிடாது அதிர்ச்சியான,உணர்ச்சிகரமான செய்திகளைக் கேட்டுக் கேட்டு எம் மக்களுக்கு அதிர்ச்சி, பதற்ற உணர்வுகளே தளர்ந்து விட்டன.

இந்த நிலையில் வாழும் இலங்கை மக்களுக்கு தேர்தல் என்பது ஒரு ஓய்வு இடைவேளையாகவே அமைகின்றது.

ஒரு தேர்தல் – ஜனாதிபதித் தேர்தல் – இப்பொழுதுதான் முடிந்திருக்கிறது. மக்கள் "கண்ணால் பார்த்து, கையால எடுத்து, யானைக்கு வாக்களித்த" தேர்தல் அது.

ஜே. ஆரின் இடத்தை பிரேமதாசா எடுத்திருக்கிறார். ஒரே கட்சியின், அதே கட்சியின் ஆட்சி தொடர்கின்றது. ஜனநாயகப் பிரமையை உருவாக்க சிறீமாவும், ஜஸியும் உதவி செய்தார்கள். தமிழ்ப் பகுதிகளிலும் பலர் வாக்களித்தனர். சிலர் வாக்குச் சீட்டுக்களில் புதுக் கவிதைகளும்எழுதினார்கள்.

தேர்தல் என்பது எம் நாட்டு மக்களுக்கு புதியதல்ல. தேர்தலின் முக்கிய அம்சமான வாக்களிப்பு அதுவும் ஆண், பெண் பேதமற்ற சர்வஜன வாக்களிப்பு 1931 ம் ஆண்டிலேயே இலங்கை மக்களுக்குக் கிடைத்தது. ஆக, அரை நூற்றாண்டுக்கு மேலான காலம் நாம் வாக்களித்து வந்துள்ளோம்.

தேர்தல் என்றதும் மக்களுக்கு ஒரு 'கிளுகிளு' ஏற்படுவது வழக்கம்.

1947 ஆம் ஆண்டில் தான் தேர்தல் இலங்கையில் ஒரு ஜனரஞ்சக பாவத்தைப் பெற்றது.

அதற்குப் பின் 1977 வரையான தேர்தல்களில் இந்த ஜனரஞ்சக இயல்பு குறையவில்லை. 1989 பொதுத் தேர்தல் முஸ்லீம்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இவ்வேளையில் கடந்த காலத் தேர்தல்களில் மறக்கமுடியாத சில அம்சங்களை நினைவு கூருவது சுவையானது.

தேர்தல் என்றால் கிராமச் சங்கத் தேர்தல் முதல் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலையே அது குறிக்கும்.

தேர்தல் என்றால் வேட்புமனுத் தாக்கல், தேர்தல் பிரசார வேலைகள், தேர்தல் கூட்டங்கள், தேர்தல் வாக்களிப்பு, வாக்கு கணக்கெடுப்பு, தேர்தல் முடிவு இவை அனைத்தும் அதில் அடங்கும்

இந்த விஷயங்கள் அனைத்தும் முந்திய காலத்தில் ஆடம்பரமாக நடைபெறும் எங்கும் எதிலும் சொல்லின்மையும் பண வன்மையும் மிகுந்தே இருக்கும்.

தேர்தலைப் பற்றிய பேச்சு எடுத்ததும் எமது முதியவர்களுக்கு ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின நினைவுதான் வரும். "அவன் பொன்னம்பேசினான் என்றால் எவ்வளவு அற்புதமாக இருக்கும். இங்கிலீஷ் என்ன! தமிழ் என்ன" என்று கூறி இன்றும் நாக்கைச் சப்புக் கொட்டுபவர்கள் இருக்கின்றனர்.

பட்டு வேட்டி சேட்டுடன்பட்டுச் சால்வையை வரிந்து கட்டிக்கொண்டு மைக்கை மூன்று நான்கு தரம் தட்டிப் 'பொன்னன்' பேச ஆரம்பிப்பதை இன்றும் அபிநயித்துக் காட்டும் முதியோர்கள் இருக்கிறார்கள்.

ஜீ ஜீயைப் போலவே ஒவ்வொரு கட்சியிலும் நட்சத்திரப் பேச்சாளர்கள் மேடைகளில் முழங்கி வாக்குகளைச் சேரித்தார்கள்.

தேர்தல் மேடைகளில் இலக்கியவாதிகள் பலரும் கலந்துகொண்டு செந்தமிழ் முழக்கம் செய்து வாக்குச் சேகரித்தார்கள்

உள்ளூர் 'மேளங்கள்' ஒரு புறமிருக்க, கொழும்பு 'மேளங்களும்' தேர்தல் காலத்தில் மற்றப் பிரதேசங்களுக்குச் சென்று தேர்தல் மேடைகளைக் களைகட்டச் செய்வார்கள்.

வீட்டுக்கு வீடு சென்று ஆதரவு சேகரித்தல் தேர்தலின் ஒரு முக்கிய வேலையாக இருந்தது. வீட்டுக்கு வீடு போகும் போது ஜீ ஜீ. குசினிக்குள் போய்விடுவாரம் அங்கே இருப்பது எதனையும் எடுத்துச் சாப்பிடுவாராம்

மக்கள் வாக்கு அளிக்கும்போது யார் தங்கள் வீட்டுக்கு முதலில் வந்தது, யார் தங்கள் வீட்டில் வாய் நனைத்தது முதலியவற்றையெல்லாம் கருத்திற் கொண்டு வாக்களிப்பார்கள்.

இந்த விஷயம் அந்தக் காலத்துக்கு மட்டும் பொருந்தியதல்ல. "எங்களை மதித்து பிரசாரம் அனுப்பியதற்காக அவருக்கு நாங்கள் வாக்குப் போட்டோம்" என்று கூறிய மக்கள் இப்பொழுதும் இருக்கத்தான் செய்கின்றார்கள்'

தேர்தலின் போது மக்கள், குறிப்பாக இளைஞர்கள் சில பயிற்சிகளைப் பெறுகின்றார்கள். ஸ்தாபனப் பயிற்சியும் பேச்சுப் பயிற்சியும் இவற்றில் அடங்கும். ஒரு தேர்தலின் பல்கோண, பல்வர்ணக் காட்சிகளைக் காணமுடியாத ஒரு நிலையில் இன்றைய தேர்தல்கள் நடைபெறுகின்றன.

ஆதரவாளர்களும் அனுதாபிகளும் புடைசூழ திரண்டு சென்று மாக்களை [illegible] கள் அணிவித்து மங்கள வாத்தியங்கள் முழங்கித் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் காலம் மீண்டும் வருமா என்று பலரும் எதிர்பார்க்கின்றனர்.

கடந்த காலத்தில் தேர்தல் கூட்டங்களை மிக விமரிசையாகவே ஒழுங்கு செய்வார்கள்.

கூட்டம் நடைபெறும் இடம் சிகரம் முதலிய கொண்டு நன்கு சோடிக்கப்படும். வாழை நட்டு தோரணம் கட்டி ஊரே இந்திர விழாக்கோலம் போடும். அதிலும் ஊருக்குஊர், குறிச்சிக்குக் குறிச்சி, கட்சிக்குக்கட்சி போட்டி. பணமும் தாராளமாகச் செலவழியும்-ஒருகாரைப் பிடித்துக் கொண்டு மைக்கை பொருத்திவிட்டு இளைஞர்கள் கூட்டம் பற்றி ஊரின் மூலை முடக்கெல்லாம் அனவுன்ஸ் பண்ணுர்வாகள் அந்தக் காருக்குப்பின்னால் ஓடும் சிறு பிள்ளைகளின் காட்சியே அலாதியானது. வேட்பாளர்கள் போட்டி போட்டுகொடிகட்டுதல், தேர்தல் கூட்டப் பந்தல் போடுதல் இக் கூட்டங்களுக்கு ஆட்களை ஏற்றிச் செல்லுதல் ஆகியவற்றைச் செய்வார்கள்.

கட்சியில் உள்ள பற்றினால் தேர்தலின் போது குடும்பச் சண்டைகளும், உறவினர் சச்சரவுகளும் மலிந்திருக்கும். காலப்போக்கத்தினால் தேர்தலும் அதன் பழைய இயல்புகள் சிலவற்றை இழந்துள்ளது; முதுமை அடைந்துள்ளது.

பல தேர்தல்கள் நடைபெற்றும் மக்களின் பிரச்சினைகள் பல தீரவில்லை.

தேர்தல்களுக்கு மக்கள் மத்தியிலிருந்து கவர்ச்சி மங்கிவிட்டது என்று [illegible] இப்பொழுது மாறிவிட்டது. [illegible] கள் பதவி உயர்வு [illegible] (இ-31)

-செய்திநேசன்-

★

1988 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பில் பெயர்களைப்பதிவுசெய்க

தேர்தல் உதவி ஆணையாளர் அறிவிப்பு

வவுனியா ஜன. 06

1988 ஆம் ஆண்டுக்கான வாக்காளர்பதிவில் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டியவர்களும், 1987 ஆம் ஆண்டு வாக்காளர் பதிவில்புதிதாகப் பெயர்கள் சேர்க்கப் பாரிக்கப்பாரும் அகற்குரிய விண்ணப்பங்களில் விண்ணப்பம் செய்யுமாறு வன்னித் தேர்தல் உதவி ஆணையாளர் திரு. திருநாவுக்கரசு கேட்டுள்ளார்.

1988 ஆம் ஆண்டு நிலவிய நெருக்கடிகளால் தேர்தல் அலுவலகம் இயங்காததன் காரணமாக இவ்வாண்டுக்குரிய வாக்காளர் இடாப்பு புதுப்பித்தல் வேலைகளைச் செய்யமுடியாமற் போய்விட்டது

எனினும் 1987 ஆம் ஆண்டு தேர்தல் இடாப்பின் பிரகாமே 1988 ஆம் ஆண்டு இடாப்பு பதிவுகளும் இடம் பெறவுள்ளன.

ஆகவே 1987ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பதிவு இடாப்புக்களில் பெயர்கள் பதியப்படாமல் விடப்பட்டவர்களும் புதிதாகப் பெயர்களைச் சேர்க்க வேண்டியவர்களும் - ஜனவரி 3 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதிக்கு உட்பட்ட காலப் பகுதியில் விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளார்கள்.

1987 ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பதிவு நிரல்களை தற்போது வன்னி தேர்தல் மாவட்டத்தின் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களிலும் நகரசபை பட்டின அலுவலங்களிலும் தபால் உபதபால் அலுவலகங்களிலும் கிராம சேவையாளர் அலுவலகங்களிலும் பார்வையிட முடியும்.

அத்துடன் பெயர் பதிவிக்குரிய விண்ணப்பங்களை இவ் அலுவலகங்களில் பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-164)

போக்குவரத்து வேறு பாதையால்

கரவெட்டி, ஜன. 6

கொடிகாமத்துக்கான போக்குவரத்துச் சேவை வேறுமார்க்கமாக நடத்தப்படுகிறது.

பருத்தித் துறையில் இருந்து கொடிகாமம் செல்லும் வாகனங்கள் நெல்லியடி, மூளாய் யூடாக வல்லிபுரக்கோயிலடி, 6 ஆம் கட்டை சென்று அங்கிருந்து வரணி தபால் நிலையத்தைக் கடந்து கொடிகாமத்தை அடைகின்றன, (இ-70)

பதவி உயர்வு

புங்குடுதீவு, ஜன. 6

புங்குடுதீவு ரோமன் கத்தோலிக்க வித்தியாலத்தில் அதிபராகக் கடமையாற்றிய திரு. க. திருச்செல்வம் இரண்டாம் தர அதிபராகவும்- புங்குடுதீவுஇருப்பிட்டி அ. மி த. வித்தியாலய அதிபராகக் கடமையாற்றிய திரு. க. தனசுசபை பிரதி அதிபராகவும் பதவி உயர்வு பெற்றுள்ளனர். (இ-31)

திருவாசக முற்றோதலும் அபிஷேகமும்

யாழ்ப்பாணம், ஜன. 6

இரணைமடு அருள்மிகு ஸ்ரீ கனகாம்பிகை அம்பாள் தேவஸ்தானத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு திருவாசக முற்றோதலும் விசேஷ அபிஷேகமும் நடைபெறும்.

நாட்டுநிலைமை, வரட்சி காரணமாக கிளிநொச்சி வாழ் விவசாய மக்களால் இப் பூஜை நடத்தப்படுகிறது.

வெள்ளிக்கிழமை இரவுமுழுவதும்அகண்ட நாம பஜனை நடைபெற்று சனிக்கிழமை காலை விசேஷ அபிஷேகமும் இடம்பெறும். (சி)

நியமனம்

ஊர்காவத்துறை ஜன 6

ஊர்காவற்துறை பிரதேச சபையின் பட்டின உப அலுவலகத்தின் பொறுப்பதிகாரியாகத் திரு. எஸ். மரியதாசன் நியமிக்கப்பட்டார். (ச-16)

வாசகர் திருமுகம்

காவலூர் என அழைப்பது சரியான சொற்பிரயோகமா?

ஊர்காவல், துறைமுக, செயற்பாடுகளைச் செய்துவந்ததால் ஊர்காவற்றுறை நகர்ப் பகுதியில் ஏற்பட்ட குடியிருப்பு ஊர்காவற்றுறை எனப் பெயர்பெற்றது.

அண்மைக் காலத்தில் சிலர் இந்நகரைக் காவலூர் என எழுதிவருகின்றனர்.

இவ்வாறு குறிப்பிடுவது தவறானதும் விரும்பத்தகாததுமாகும்.

காவலூர் என்னும்போது துறைமுகச் செயற்பாடு மறைக்கப்படுகிறது. மேலும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட இடப்பெயராக ஊர்காவற்றுறை இருப்பதாலும் பல அரச ஆவணங்களிலும், அத்தாட்சிப் பத்திரங்களிலும் இப்பெயர் பயன்படுத்தப்படுவதாலும் ஊர்காவற்றுறை என்றே வழங்குதல் பொருத்தமாகும்.

ஆங்கிலத்தில் Kavts என்பதும் அங்கீகரிக்கப்பட்ட பெயரே. அங்கீகரிக்கப்படாத பெயர்ப் பாவனை பல பிரச்சினைகளைப் பல இடங்களில் மக்களுக்குத் தோற்றுவிக்கலாம்.

யாழ்ப்பாணத்தில் பல இடப்பெயர்கள், கிராமப் பெயர்கள் உத்தியோகப்பற்றற்ற முறையில் மாற்றப்படுவதும், சுருக்கப்படுவதும், திரிபுபடுத்துவதும் அதிகரித்துக் காணப்படுகின்றது. ஒழுங்கு முறையற்ற பெயர் மாற்றங்கள் தவிர்க்கப்படவேண்டும்.

பேராசிரியர்
பொ. பாலசுந்தரம்பிள்ளை
புவியியற்றுறை,
யாழ். பல்கலைக்கழகம்.

மன்னாருக்கு அழைத்துவரப்பட்டு

நெடுந்தீவுக் கரையில் இறக்கிவிடப்பட்ட இந்தியர்

நெடுந்தீவு, ஜன6

இராமஸ்வரத்தில் இருந்து மீன்பிடிப் படகு ஒன்றில் புறப்பட்ட ஆறு இந்தியர்கள் நெடுந்தீவை அடைந்தனர்.

இதுபற்றிக்கூறப்படுவதாவது:

இராமையா(42வயது) பாலு (55வயது), தாசன் (40 வயது) கணபதி(40 வயது), பாலு(40வயது) என்பவர்களுடன் மற்றும் ஒருவரும் இராமேஸ்வரத்தில் இருந்து மீன்பிடிப்படகு ஒன்றில் இலங்கையின் மன்னார்ப் பகுதிக்குச் செல்லும் பொருட்டு வந்துகொண்டிருந்தனர்.

நெடுந்தீவுக் கரைக்குச் சுமார் இரண்டு மைல் தூரத்தில் கடற்படையின் ரோந்துப் படகு ஒன்று நிற்பதைப் படகோட்டி கண்டார்.

மன்னாருக்குச் செல்வதும் முடியாததில் ஏற்பட்டதும் தூரத்தில் தெரிந்த நெடுந்தீவுக் கரையைக் காட்டி மன்னார்த்துறை அண்மித்துவிட்டதெனவும் சிறிதுதூரம் நீந்திச் சென்று கரையைஅடைந்துவிடமுடியும் எனவும் தெரிவித்து படகில் வந்தவர்களைக் கடலில் இறக்கிவிட்டார்.

இவர்கள் அனைவரும் நீந்தி நெடுந்தீவுக் கரையை அடைந்தனர்,

கடலில் இறங்கிய போது பாலு என்பவர் படகில் உந்துவிசைக்கருவியின் தாக்குதலுக்கு உள்ளாகி தற்சமயம் முதுகுப்புறத்திலும் காலிலும் காயங்களுடன் நெடுந்தீவு அரசினர் மருத்துவமனையில் சிகிச்சைக்காகத் தங்கியுள்ளார். (இ-111)

கொடுப்பனவு வேலைகள் துரிதம்

புதுக்குடியிருப்பு, ஜன 6

நிவாரணக் கொடுப்பனவுகளை உரிய காலத்தில் வழங்க வேண்டும் என்பதற்காகப் புதுக்குடியிருப்புஉதவி அரசாங்க அதிபர் அலுவலகம் இரவு பகலாக இயங்கி வருகிறது.

ஒலுமடு, ஒட்டுசுட்டான், முருகண்டி, முத்தையன்கட்டு ஆகிய பிரதேசங்களில் இருந்தும் பெருமளவிலான மக்கள் உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு வந்து தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து வருகின்றனர். (ச-126

ஒன்றை ஒன்று தாக்குவதில்லை என்று கட்சிகள் உடன்பாடு

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இலங்கை ஐக்கிய மக்கள் கட்சியும் அனுராதபுரம், கண்டி, கொழும்பு, புத்தளம், களுத்துறை ஆகிய தேர்தல் மாவட்டங்களில் போட்டியிட்டாலும் ஆளை ஆள் தாக்குவதில் இரண்டு கட்சிகளும் ஈடுபடாது.

- இத் தகவல் ஜனாப் அஷ்ரப் தெரிவித்தார்.

113 குடும்பங்கள் தெரிவு

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர்பிரிவில் சேவை சரணவிடமைப்பு திட்டத்தின் கீழ் உதவி பெற மொத்தம் 113 குடும்பங்கள் தெரிவாகியுள்ளன.

பணம் பெறுபவர்கள் வறுமையில் வாழ்பவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது என விடமைப்பு உத்தியோகத்தர் திரு எஸ். நாகேஸ்வரன் தெரிவித்தார். (சி-72)

மழையின்மையால் நெற்கதிர்கள் வெளிவரமுடியாத நிலை

கரவெட்டி, ஜன. 6

கரவெட்டிப் பகுதிகளில் உள்ள நெல்வயல்கள் நீர் இன்றி வரண்டிருப்பதனால் நெற்பயிர்களில் இருந்து கதிர்கள் வெளிவர முடியாத நிலை உருவாகியுள்ளது.

நெற்பயிர்களுக்குப் போதியளவு உரம்போட முடியாததால் பயிர்களின் வளர்ச்சி குன்றி உள்ளன.

இதை அடுத்து குளங்களுக்கு அண்மையில் உள்ள வயல் சொந்தக்காரர்கள் தமது வயல்களுக்குக் குளத்து நீரை பம்புகள் மூலம் பாய்ச்சி வருகின்றனர்.

ஆனால் மிகவும் தொலைவில் உள்ள வயல்களுக்கு நீர் பாய்ச்ச முடியாததினால் பயிர்கள் மிக மோசமாகப் பாதிப்படைந்துள்ளன. (க-70)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ENGLISH FOR BEGINNERS

ஆரம்ப நிலையிலிருந்து

ஆங்கில மொழிப் போதனை

ஆங்கில அறிவு இல்லாதவர்கள் கூட சேர்ந்து கற்கலாம்.

- ✶ புதிய வகுப்பு
- ✶ நவீன முறை
- ✶ பயன்மிக்கது.

ஆரம்பம்: 7.1:89 மு. ப. 8-30 மணி

அஸ்ரன் ஆசிரிய குழுவின் இணைந்தசேவை

கற்கை நெறி :-
SPEECH, READING, WRITING

- ✶ காலம் 4 மாதங்கள்
- ✶ சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்
- ✶ இலவச பாடக்குறிப்புகள்
- ✶ கட்டணம் ரூபா. 250/- (முழுப்பயிற்சிக்கும்)

விபரங்களுக்கு :

அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்

101/10, ஸ்ரான்லி வீதி — யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)
(C/1047)

பதினெட்டாவது வருட நினைவஞ்சலி



முருகர் நவமணி

தோற்றம் 3-12 1928 — மறைவு 6 1-1971

ஆண்டுகள் பதினெட்டு முடிந்ததையா-
அபரபக்கச் சஷ்டியிலே
மீண்டும் நீ வாராயோ மேதினிக்கு-
—நீண்டதொரு
புத்தகத்திற் பாடிப் புகழ்ந்திடுவோம்
புதுமை மிகு
சித்திரத்தி லுங்காண் போம் சிறந்து
உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மகன்மார், மகள்மார்,
மருமகன்மார் பேரப்பிள்ளைகள்.

12/13 பென்னடி வீதி,
நாவாந்துறை, யாழ்ப்பாணம்.
(8726)

முதலாண்டு அஞ்சலி

தோற்றம்: 23.03.1902

மறைவு: 20 12 1987

திருமதி
இலட்சுமிப்பிள்ளை சுப்பிரமணியம்

திதி: 07 01. 1989

அன்னையுமாய் தந்தையுமாய்
அன்புடன் வளர்த்து
அறிவுடன் விளங்க அறிவினையூட்டிச்
செறிவுடன் நிற்க ஒழுக்காங்காட்டி
நிறையடி செய்திய எமது அன்னைக்கு
நிறைவுடன் செலுத்துவோம்
நினைவாஞ்சலி!
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

துயரன்,
பருத்தித்துறை (8746)

யாழ். மாவட்ட உள்ளூர் ஆசிரியர் இடமாற்றம்: 3 ஆவது பட்டியல்

(நேற்றைய தொடர்ச்சி)

திரு. எஸ். சீவரத்தினம், மயிலிட்டி றோ.க.த.க.பா - மாவட்டபுரம் வடக்கு அ.மி.த.க.பா.

செல்வி வி. மகேஸ்வரி மயிலிட்டி தெற்கு ஞானோதையா வி.- குரும்பசிட்டி பொன்பரமனந்தா ம.வி.

திரு. என். இளையதம்பி, இளவாலை றோ.க.த.க.பா.— அளவெட்டி தெற்கு அ.மி.த.க.பா

திருமதி எம்.இராஜசேகரம், அளவெட்டி தெற்கு அ.மி.த.க.பா.— அளவெட்டி அருணாசல வித்தியாலயம்

திருமதி பி.குமேஸ்வரன், தையிட்டி சிவகுருநாத வி - வியன்காமம் ம.வி.

திரு. பி: அன்றாமாதகல் புனித யோசப் ம.வி.— கீரிமலை நகுலேஸ்வரா ம.வி.

திருமதி கே சின்னத்தம்பி, கீரிமலை நகுலேஸ்வரா ம.வி — குலமங்கால் றோ.க.த.க.பா. மல்லாகம்

திருமதி ஆர். தியாகராசா, மாதகல் புனித தோமஸ்றோ.க.த.க.பா மாதகல் புனித யோசப் ம.வி.

திரு. எஸ். சின்னத்தம்பி, மயிலிட்டிவடக்கு கலைமகள் ம.வி.—தெல்லிப்பளை சைவப்பிரகாச வித்தியாலயம்

திருமதி பி சச்சிதானந்தம், தெல்லிப்பளை சைவப்பிரகாச வி. -தந்தைசெல்வா தொடக்கநிலைப்பள்ளி

திருமதி ரீ சோமறுலக பாகு கட்டுவன்புலம் ம.வி. தந்தைசெல்வா தொடக்கநிலைப்பள்ளி

திருமதி ரீ. ஸ்கந்தராசா, புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை. — வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி.

திருமதி பிரான்ஸிஸ்கா எட்வேட், புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை — செல்லாலை றோ.க.த.க.பா.

திரு. பசுபதி, சங்கானை சிவப்பிரகாச ம.வி — உரும்பராய் இந்துக் கல்லூரி

திருமதி பா. சிவஞானம், ஆவரங்கால் மகாஜனவித்தி. — புனித திரேசா பெண்கள் பா

செல்வி. மல்லிகா நாராயணி, புலோலி மெ.மி.த.க.பா. — கனகரத்தினம் ம.ம.வி

திரு. க. நாயசோதரன், நெடுந்தீவு றோ.க.பெ.பா — புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் பா.

திரு வி. தவிநாயகம், அனலைதீவு தெற்கு அ.த.க.பா. — நயினாதீவு நாகபூஷணி வித்தி.

திரு இ. கனகேந்திரம். மூளாய் சைவப்பிரகாச வி. — சங்கானை சிவப்பிரகாச ம.வி.

திருமதி செ. நா ஸ்ரீஸ்சந்தரராசா, மூளாய் சைவப்பிரகாச வித்தி. — வட்டு. திருநாவுக்கரசு வித்தியாலயம்.

திரு. எஸ் முருகேசு, கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி, — நீர்வேலி சி.சி.த.க.பா.

திரு. எஸ் மனோகரன் கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி: — புனித ஜேம்ஸ் ம.வி. யாழ்ப்பாணம்

திரு. ச. சர்வராசா, கைதடி விக்னேஸ்வர வித்தி — சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

திரு. இ. நாகராசா, கைதடி விக்கினேஸ்வர வித்தி — மட்டுவில் தெற்கு அ.மி.த.க.பா.

திருமதி ஜே நாகேந்திரா. கனகரத்தினம் ம.ம.வி. — கோப்பாய் சரவணபவானந்த வித்தி

திரு. ந. அருட்செல்வி வர்ணன், கைதடி விக்னேஸ்வர வித்தி. — சாவகச்சேரி இந்துக்கல்லூரி

திருமதி ந. சிவபாதசுந்தரம், [illegible] திருநாவுக்கரசு ம.வி.— சாவகச்சேரி இந்துக்கல்லூரி

திரு டி.ரி. முத்தையா ஏழாலை தெற்கு அ.மி.த.க.பா - றோ.க.த.க.பா.

திரு. எஸ் சண்முககுமார். கந்தரோடை தமிழ் கந்தையா வித்தி- கந்தரோடை தமிழ் கந்தையா வித்தி (3 நாள்), யாழ்/ இணுவில் சைவ மகாஜன ம.வித்தி (2 நாள்)

திருமதி ஏ. சண்முகலிங்கம், இராமநாதன் கல்லூரி- இணுவில் சைவப்பிரகாச ம.வித்தி.

திரு எஸ். கணேசமூர்த்தி, ஸ்கந்தவரோதய கல்லூரி- சுதுமலை சிந்திய பாரதி வித்தி

திரு. பி கணேஸ்வரலிங்கம் சுன்னாம் றோ.க.த.க.பா.— ஏழாலை தெற்கு அ.மி.த.க.பா.

திருமதி ஞா. திருக்கேதீஸ்வரன், தாவடி இந்து த.க.பா- தாவடி இந்து த.க.பா. (3 நாள்) யா/சுதுமலை சிந்திய பாரதி வி. 2நாள்),

திருமதி தி கனகரத்தினம். சுன்னாம் மயிலணி சைவ ம.வி (3 நாள்), யா/சுதுமலை சிந்திய பாரதி வித்தி (2நாள்)- ஆனைக்கோட்டை. றோ.க.த.க.பா,

செல்வி. எஸ். ஆசீர்வாதம் நவாலி ம.வித்தி- மயிலணி சைவ ம.வி. [3நாள்) யா/நவாலி ம.வி(2 நாள்]

திருமதி வி. ஜே பி. மூர்த்தி, மானிப்பாய் மெமோறியல் ஆங்கில கல்லூரி- மானிப்பாய் மெமோறியல் (3 நாள்) யா/ கந்தரோடை தமிழ் கந்தையா வி. 2 நாள்).

திரு.எம் குணநாயகம் இமையாளன அ.த.க.தா. – அச்செழு மெ.மி. ப.த.க.பா அதிபராக,

திரு. கே சோமசுந்தரஐயர். யாழ் இந்து ஆரம்ப பாடசாலை- நாவாந்துறை றோ.க.த.க.பா.

மரம் நடுகை

நெடுந்தீவு மரம் நடும் இயக்கம் இங்கு பெருமளவில் மரக்கன்றுகளை வீதியோரங்களில் நடுகை செய்துள்ளது.

மரக்கன்றுகளின் பாதுகாப்புக்காகக் கூடுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

ஒரு மரத்தைப் பாதுகாக்கச் சுமார் இருநூற்றைம்பது ரூபா செலவு செய்யப்படுவதாகஅதன் தலைவர் திரு இரா. தர்மலிங்கம் தெரிவித்தார் (இ-111)

பொங்கல் விழா

மண்டைதீவு இந்து இளைஞர் திருமுறைக் கழகத்தின் பொங்கல் விழா, கழகத் தலைவர் திரு க. மாணிக்கலிங்கம்தலைமையில்பொங்கல் தினத்தன்று நடைபெறும்.

மண்டைதீவு மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இந்த விழாவில் நாடகங்கள், கவியரங்கு, பட்டிமன்றம், சிறுவர் நிகழ்ச்சிகள் ஆகியன [illegible] (8788)

புனர்வாழ்வு நிவாரணப்பணம்

பச்சிலைப்பள்ளி, ஜன. 6

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பத்து கிராமசேவை அலுவலர் பகுதிகளிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணம் காசோலை மூலம் பளை உதவி அரசாங்க அதிபர் எஸ். கந்தசாமியினால் வழங்கப்பட்டுவருகிறது.

அத்துடன் சேதமாக்கப்பட்ட வீடுகளை நிர்மாணிப்பதற்கு ரூபா பதினாயிரம் வீதம் விரைவில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக உதவி அரச அதிபர் தெரிவித்தார். (சி-117)

'தேர் திருப்பணியில் ஈடுபட்டு புண்ணியத்தை தேடுங்கள்'

மானிப்பாய், ஜன 6

'முருகன் சூரசம்ஹாரம் முடித்துத் திரும்புகையில் இப்பகுதியில் வெண்ணிறக்குன்று (கன்னாம்) இருப்பதைக் கண்டு மயில்வாகனத்திலிருந்து இறங்கி அசுரர்களைக் கொன்ற பழிநீங்க சிவபூசை செய்தார் இறைவன் பூசையை ஏற்று அவருக்குத் தரிசனம் கொடுத்தபோது மயில்வாகனம் சிவபெருமானையும் முருகனையும் சுற்றிந்து வணங்கி அழகாக நின்றது இதனால் மயிலணி என்ற பெயர் ஏற்பட்டது இத்தலை சிறப்பு வாய்ந்த இக்கோவிலுக்கான தேர்த் திருப்பணியில் ஈடுபட்டு புண்ணியத்தைத் தேடுங்கள்'.

மயிலணி ஸ்ரீ விஸ்வநாதர் கோவிலில் புதிதாக அமைக்கப்படும் சித்திரத்தேர்த் திருப்பணி வேலைகளை ஆரம்பித்து வைத்து உரை யாற்றிய பிரம்மஸ்ரீ சோ. சோமாஸ்கந்தக் குருக்கள் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

நாம் தேடிக் குவிக்கும் செல்வத்தில் ஒரு சிறு பகுதிதான் புண்ணிய வழியில செலவிடப்படுகிறது.

உயிர்களுக்காகச் செய்யப்படும் புண்ணியத்திலும் பார்க்க ஆண்டவனுக்காகச் செய்யப்படும் புண்ணியம் ஆயிரம் மடங்கு சிறந்ததாகும் பதிபுண்ணியம் செய்வதால் நாம் இம்மை மறுமைப் பயன்களை எய்த

நேர்முகப் பரீட்சை

பச்சிலைப்பள்ளி, ஜன, 6

கிளிநொச்சி மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் வெளிக்கள உத்தியோகத்தருக்கான நேர்முகப் பரீட்சை ஜனவரி பன்னிரண்டாம் திகதி நடைபெறவுள்ளது (சி-117)

நூலகர்சேவை பரீட்சையில் பதினெட்டுப் பேர் சித்தி

பச்சிலைப்பள்ளி ஜன 6

உள்ளூராட்சி சேவைத் திணைக்களத்தால் அண்மையில் நடத்தப்பட்ட நூலகர் சேவை (தமிழ் மொழி) பரீட்சையில் பதினெட்டுப்பேர் சித்தி அடைந்துள்ளனர்என்று உள்ளூராட்சிச் சேவைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்

யாழ் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பன்னிரண்டு பேரில சாவகச்சேரி நகரசபையில் ஐந்து பேரும் சாவகச்சேரி பிரதேச சபையில் இரண்டு பேரும் தெரிவாகியுள்ளனர்.

சாவகச்சேரி நகரசபையில் இருந்து செல்வி மு. சிவபாக்கியம் திரு. ந. சிறிகாந்தன், செ. அருளம்பலம், ந. சுந்தரலிங்கம், மு. பரமேஸ்வரன் ஆகியோரும் பிரதேச சபையில் இருந்து திரு வி பாலசுப்பிரமணியம், செல்வி முனகேஸ்வரி ஆகியோரும் தெரிவானவர்களாவர்.

பரீட்சை முடிவின்படி முதலிடம் பெற்றசெல்வி முருகேசு சிவபாக்கியம் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் திருகோணமலை நகரசபைக்கு நூலகராக நியமனம் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ஏனையோரும் விரைவில் நியமனம் செய்யப்படுவர் என உள்ளூராட்சிச் சேவைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (சி-117)

கொம்பியூட்டர் கல்வி

யாழ்நகரிலேயே மிகத்தரமான முறையில்
IBM - Pc, Apple II, Laser, Commodore Texas, Sharp Computer களில்
பயிற்சியளிக்கப்படுகின்றன.

Basic Programming Course

ஆரம்பம்: 07 01-1989 (1 30 p m)
11-01-1989 (1-30 p m Weekday)

I. D. P
Computer Centre,
342, K. K S ROAD, JAFFNA.

✶ மல்லாகம் கிளையிலும் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

(8749)

BECON

156/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

A/L 89

வினாவிடை - வகுப்பு
பொருளியல்
S. வரதராஜன்

Week - end Class
7-1-89 சனி
பிரிவு I 8.00 a.m.
பிரிவு II 1-00 p.m.

Day Class
9-1-89 திங்கள் 11-00 a. m.

பொருளியல் பகுதி II
செல்மதி நிலுவை
ஆரம்பம் 7-1-89 சனி 11-00 a m.

(C/1062)

BECON

156/3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

A/L 89

கலை, வர்த்தகம்
மீட்டல் வகுப்புக்கள்

பொருளியல்	—	வரதராஜன்
வர்த்தகம்	—	ரட்ணம்
அளவையியல்	—	S. S. மனோகரன்
கணக்கியல்	—	மரியதாஸ்
தமிழ்	—	மீரா - தாஸ்
இந்து நாகரிகம்	—	ஜோதீஸ்வரன்

DAY CLASS
9-1-89 திங்கள் 8.00 a.m.

WEEK - END CLASS
7-1-89 சனி 9.00 a.m.

(C/1063)

G.C.E. O/L பரீட்சையில்

ஆங்கிலத்தில் விசேட சித்தி பெற [D]
ஓர் அரிய சந்தர்ப்பம்
பெப் 89-இல் நடைபெறவுள்ள பரீட்சைக்கான

SPECIAL O/L ENGLISH

RAPID REVISION CLASS
1 1/2 மாத துரித பயிற்சி

ஆரம்பம்: 7-1-89 பி.ப. 1 மணி

முதன்மை வாய்ந்த அஸ்ரன ஆங்கில ஆசிரிய குழுவின் இணைந்த சேவை.

- ✶ வாராந்தம் 8 மணித்தியால போதனை
- ✶ இலவச பாடக் குறிப்புகள்
- ✶ மாதிரி வினா - விடைப்பயிற்சிகள்
- ✶ கட்டணம் ரூபா. 150/- [முழுப்பயிற்சிக்கும்]

விபரங்களுக்கு :

அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்

101/10, ஸ்ரான்லி வீதி - யாழ்ப்பாணம்
(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)
C/1520)

✶ **Computer Programming and Data Processing in Basic Language**

பயிற்சிக் காலம்: 2 மாதம்
கட்டணம் 950/- (இரு பிரிவுகளாகச் செலுத்தலாம்)

ஆரம்பம்: 09 - 01 - 1989
(திங்கள், புதன், வெள்ளி, வகுப்புகள்)

O/L படித்த இருபாலாரும் சேரலாம்.

மின்சாரத்தடை இன்றி குளிரூட்டப்பட்ட அறையில் கூடிய நேர செய்முறைப் பயிற்சி IBM (Compatible) கம்பியூட்டரில் வழங்கப்படும் பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

✶ குறிப்பிட்ட தொகை மாணவ, மாணவிகளே சேர்க்கப்படுவார்கள் ஆகையால் விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுப் பதிவு செய்து கொள்ளவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 07 - 01 - 1989

UNIKCO COMPUTER CENTRE

No. 5 மின்சார நிலைய வீதி,
2 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(உதயதாரகை கந்தோருக்கு அருகாமை) [C/1029]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யாமொழி

குறள்:

சமூா அக்கால் பன்னியுள் வைத்தற்றால் சான்றோர்
குழா அத்துப் பேதை புகழ்.

பொருள்:

சான்றோரின் கூட்டத்தில் பேதை புகுதல், ஒருவன் தூய்மையில்லாதவற்றை மிதித்துக் கழுவாத காலைப் படுக்கையில் வைத்தாற் போன்றது.

உதயன்

உண்மை - நிதானம் - துணிவு

இல. 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
06 01. 1989 த. பெ இல 23

அமெரிக்காவுக்கு விரைவில் பதிலடி; லிபியத் தலைவர் கடாபி எச்சரிக்கை!

லண்டன் ஜன 6

அமெரிக்காவுக்குப் பதிலடி கொடுக்கப்படும் என்று லிபியத் தலைவர் கேர்னல் மும்மாரி கடாபி நேற்று எச்சரித்தார்.

மத்திய தரைக்கடல் பகுதியில் வைத்து லிபியாவின் இரண்டு மிக்சண்டை விமானங்களை அமெரிக்க விமானந்தாங்கிக் கப்பல் 'ஜோன் கென்னடி' ஏவுகணையால் சுட்டு வீழ்த்தியது தெரிந்ததே.

அதைத் தொடர்ந்தே லிபியத் தலைவர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

அமெரிக்காவின் இத்தாக்குதல் முன் கூட்டியே திட்டமிடப்பட்ட ஒன்று என்று கேர்னல் கடாபி தெரிவித்தார்.

ஆனால், தற்பாதுகாப்புக் சருதியே லிபிய விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன என அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் பிராங்க் கருலஸி அறிவித்தார்.

இதே வேளை லிபியா மீது அமெரிக்கா மேலும் விமானத் தாக்குதல்களை நடத்தும் என்று நேற்று பதற்றம் நிலவியது

இதன் காரணமாக தலைநகரான திரிப்பொலியில் இருந்து மக்கள் பெரும் எண்ணிக்கையில் பாதுகாப்பான இடங்களை நாடிச் சென்றனர் என்று அறிவிக்கப்பட்டது

''விமானத் தாக்குதல் முடிந்து போன விஷயம்''— என்று அதிபர் றேகன் வாஷிங்டனில் தெரிவித்தார்.

இதனிடையில் லிபியாவின் கோரிக்கையை ஏற்று ஐ. நா. வின் பாதுகாப்புச் சபையின் அவசரக் கூட்டம் நேற்று நடந்தது.

அமெரிக்காவின் செயல், சமாதானத்துக்கு உதாவது என்று சோவியத் யூனியன் கண்டித்தது.

பிரிட்டனோ, லிபியா இரசாயன ஆயுத உற்பத்திக் தொழிற்சாலை ஒன்றை நிறுவி வருகிறது என்ற அமெரிக்கக்குற்றச்சாட்டு சரியானதுஎன நேற்றுத் தெரிவித்தது. (எ)

மத்திய தரைக்கடல் மோதலின் எதிரொலி

ஸ்கொட்லந்து விமான விபத்து:

அரபாத்தும் தகவல் தரலாம் என்று அமெரிக்க அரசு அறிவிப்பு!

வாஷிங்டன் ஜன 5

270 பேரைப் பலி கொண்ட ஸ்கொட்லாந்து பான்அம்விமான விமத்து பற்றிய தகவல்களை பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத் தரவிரும்பினால் அவை ஏற்றுக்கொள்ளப்படும் என்று அமெரிக்க சமஷ்டி புலனாய்வுத் துறை இயக்குநர் அறிவித்திருக்கிறார்.

பான் அம் விமான விபத்துக்குச் சதிச் செயலே காரணம் என்று அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இதற்குக் காரணமானவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சியில் அமெரிக்காவும்பிரிட்டனும் உலகளாவிய தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்றன.

பான் அம் விமானத்தைக் குண்டு வைத்துத் தகர்த்தது மனிதாபிமானமற்றசெயல் என்று யாசிர் அரபாத் கண்டித்தார் அத்துடன், இச்சதிச்செயலுக்கு யார் காரணம் என்பதைக் கண்டுபிடிக்கத் தானும் ஒரு விசாரணையைத் நடத்தப் போவதாக அரபாத் அறிவித்தார்.

அதைத் தொடர்ந்தே அமெரிக்க எப். பி. ஐ. நிறுவன இயக்குநர் முன்கண்ட அறிவிப்பை விடுத்தார். (எ)

சீன - ஆபிரிக்க மாணவர் மோதல்; கறுப்பு இன நாடுகள் அதிர்ச்சி

அடிஸ்அபாபா ஜன 5

சீனாவில் ஆபிரிக்க மாணவருக்கு எதிரான இயக்கம் நடத்தப்படுவது குறித்து ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனம் கவலையும் அதிர்ச்சியும் வெளியிட்டிருக்கிறது

எதியோப்பியத் தலைநகரான அடிஸ் அபாபாவில் உள்ள சீனத்தூதரை அவசரமாக அழைத்து ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனத் தலைவர் அதிர்ச்சி தெரிவித்தார் ஆபிரிக்க மாணவரின் நலன்களைக் கவனிக்க சீன அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றி சீனத் தூதரிடம் அப்போது விசாரிக்கப்பட்டது.

இதற்கு இடையில்— ஆபிரிக்க மாணவருக்கு எதிரான கலவரம் குறித்து சீனா கவலையடைந்துள்ளது

ஆபிரிக்க நாடுகளின் விடுதலைப் போராட்டங்களுக்கு சீனா சர்வதேச மட்டத்தில் பூரண ஒத்துழைப்பு வழங்கி வருகிறது.

இந்த நிலையில், சீன-ஆபிரிக்க மாணவர் மோதல் பீகிங் அரசுக்கு ராஜதந்திர ரீதியில் இக்கட்டான நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. (எ)

✶ ஆசியாக் கண்டத்தில்

நீர் நிலைப் பறவைகள் கணக்கெடுப்பு ஜன 8, 15 ஆம் திகதிகளில் நடக்கும்

லண்டன், ஜன 5

நீர் நிலைகளுக்கு அடிக்கடி செல்லும் பறவைகள் பற்றிய கணக்கெடுப்பு இம்மாதம் 8 ஆம் திகதியும் 15 ஆம் திகதியும் ஆசியக் கண்டத்தில் உள்ள சகல நீர் நிலைகளிலும் இடம் பெறும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது.

பறவைகள் ஆராய்ச்சியில் ஈடுபடுவோர் இந்த இரு தினங்களிலும் கண்டத்தில் உள்ள பெரியதும் சிறியதுமான நீர் நிலைகளுக்கு விஜயம் செய்வர்

லண்டனைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச நீர் நிலைப் பறவைகள் ஆராய்ச்சி நிறுவனம் இந்தக் கணக்கெடுப்பைநடத்துகிறது.

இதிலிட்டத்திற்குப் பெயர் 'நீர் நிலைப் பறவைகள் கணக்கெடுப்பு' என்று சூட்டப்பட்டுள்ளது.

நீர் நிலைகளில் குறிப்பிட்ட ஒரு தினத்தில் வந்து சேரும் விதம் விதமான பறவை இனங்கள் அருகி வரும் பறவை இனங்கள் பற்றிய புள்ளி விவரங்கள் அப்போது சேகரிக்கப்படும்- இந்தக் கணக்கெடுப்பு மூன்றாவது ஆண்டாக நடைபெறுகிறது.

1987 இல் நடந்த முதலாவது கணக்கெடுப்பு பற்றிய அறிக்கையின் முதல் பகுதி அண்மையில் வெளியிடப்பட்டது: (எ)

படகு விபத்து 60 பேர் பலி!

சௌதமாலா, ஜன.5

சௌதமாலாவில் அண்மையில்இடம்பெற்ற பயணிகள் படகு விபத்து ஒன்றில் 60பேர் உயிரிழந்தனர்.

விபத்து நடந்த நேரம் படகில் 120 பயணிகள் இருந்தனர் 40 பேரின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. 17 பேர் பற்றி தகவல் இல்லை. (எ)

துருக்கியில்சித்திரவதை மன்னிப்புச்சபை கண்டனம்

லண்டன் ஜன 5

துருக்கியில் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளில் அரசு பாதுகாப்புப் படையினர் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாக சர்வதேச மன்னிப்புச் சபை மீண்டும் கண்டனம் தெரிவித்துள்ளது.

தினமும் சித்திரவதைப்பூதாரர்கள் அங்காராவில் இருந்து வந்து கொண்டிருப்பதாக மன்னிப்புச் சபை தனது பிந்திய 73 பக்க அறிக்கையில் தெரிவித்துள்ளது

அரசுக்கு எதிராக கருத்து வெளியிடுபவர்கள் காரணமின்றித் தனிமைச் சிறையில் வைக்கப்படுகிறார்கள்;

சித்திரவதைக்குள்ளாக்கப்படுகிறார்கள் பெண் கைதிகள் மானபங்கப் படுத்தப்படுகிறார்கள் இது உடனடியாக நிறுத்தப்படவேண்டும் இப்படி மன்னிப்புச் சபை அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (எ)

பான் அம் விமான விபத்து: வால் பகுதி கண்டுபிடிப்பு

லண்டன், ஜன. 5

ஸ்கொட்லாந்தில் நொறுங்கி விழுந்த பான் அம் விமானத்தின் வால் பகுதி, விபத்து நடந்த இடத்தில் இருந்து 15 மைல் தொலைவில் கண்டு பிடிக்கப்பட்டது.

விபத்து நடந்த இடத்தைச்சுற்றியுள்ள40சதுரமைல் பிரதேசத்தில் கடந்த சில தினங்களாக தீவிர தேடுதல் நடத்தப்பட்டது. அப்போதே வால்பகுதி கண்டு பிடிக்கப்பட்டது.

இதுவரை விமானத்தில் 20சதவீத பகுதிகள் மட்டுமே கண்டு பிடிக்கப்பட்டன.

உயிரிழந்தவர்களில் 242பேரின் சடலங்கள் எடுக்கப்பட்டன. அவற்றில் 86பேரின் சடலங்கள் மட்டுமே இதுவரை அடையாளம் காணப்பட்டன.

கடைசியாக விமானத்தின் சிதைவு தாக்கி மரணமான 12வயதுச் சிறுவனின் சடலம் அடையாளம் காணப்பட்டது.

விமானத்தின் சிதைவு 15சதுரமைல் பிரதேசத்தில் பரவி கிடக்கின்றன. (எ)

அமெரிக்கா செல்லும் பலஸ்தீனக் குழு

லண்டன், ஜன 5

பலஸ்தீனியரின் தாயகம் மீட்கும் போராட்டம் பற்றி அமெரிக்கருக்கு எடுத்துச் சொல்ல 5 பேர் அடங்கிய பலஸ்தீன தூதுக் குழு ஒன்று அனுப்பப்பட்டுள்ளது

பலஸ்தீன விடுதலை இயக்கம் இந்த முடிவை எடுத்திருப்பதாக அல்ஜீரியாவில் இருந்து ஒலிபரப்பாகும் 'பலஸ்தீன குரல்' என்றழைக்கப்படும் வானொலி அறிவித்தது.

தூதுக்குழுவில் இடம் பெறும் பலஸ்தீனியர்கள் அமெரிக்காவுக்கு விஜயம் செய்யத் தகுதியுடைய அரசியல், சட்ட பூர்வமானவர்களே— என்று வானொலியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (எ)

அங்கீகாரம்

லண்டன் ஜன 5

சோவியத் யூனியனில் 1991 இல் மனித உரிமை மாநாடு நடத்தப்படுவதை அமெரிக்காவும் பிரிட்டனும் நேற்று கொன்கையனவில் அங்கீகரித்தன. (எ)

முஸ்லிம் பெண் பிரதமரா? மக்கா இமாம் கருத்து

ரியாத், ஜன. 5

முஸ்லிம் பெண் ஒருவரை பிரதமராக பதவி வகிக்க அனுமதிப்பதா என்பது பற்றி பாகிஸ்தானில் உள்ள மார்க்க அறிஞர்களே தீர்மானிக்க வேண்டும்.

புனித மக்காவின் சிரேஷ்ட இமாம் ஷேக் முகமது அப்துல்லா இப்படித் தெரிவித்தார்.

''பாகிஸ்தான் அரசியல் பிரச்சினை பற்றி நான் கருத்து எதையும் சொல்ல விரும்பவில்லை'' -என்றும் அவர் சொன்னார். (எ)

ஆந்திர மந்திரி ராஜினாமா

ஹைதராபாத் ஜன 5

ஆந்திர மாநில உள்துறை அமைச்சர் பிரசாத ராவ் நேற்று ராஜினாமாச் செய்தார் விஜயவாடாவில் உண்ணாவிரதமிருந்த இந்திரா காங்கிரஸ் எம்.எல்.ஏ மோகனரங்சராவை இனந்தெரியாதவர்கள் கொலை செய்த சம்பவத்துக்கு தார்மீகப் பொறுப்பைத் தான் ஏற்பதாகக் கூறி இவர் ராஜினாமாச் செய்தார்- (எ)

காஷ்மீர் பற்றி பெனாசிர்

இஸ்லாமபாத், ஜன. 5

இந்திய உபகண்டத்தில் அமைதி நிலவ காஷ்மீர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கண்டாக வேண்டும் என்று பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் பூட்டோ சொன்னார்.

இந்தோனேஷிய ஜனாதிபதி 1993இல் ஓய்வு பெறுவார்

ஜாகர்த்தா, ஜன 5

இந்தோனேஷிய ஜனாதிபதி ஜெனரல் சுஹார்ட்டோ 1993 ஆம் ஆண்டில் பதவி விலகப் போவதாக அறிவித்திருக்கின்றார்.

21 ஆண்டுகளாக ஜனாதிபதி பதவியை இவர் வகித்து வருகிறார்.

தற்போதைய பதவிக் காலம் முடியும்போது எனக்கு வயது 72 ஆகி விடும். இந்தோனேஷியப் பிரசைகளின் சராசரி வயது 56. ஓய்வு எடுப்பதற்கு 72 வயதுபோதுமானது'' — இப்படி இப்போது 67 வயதான ஜனாதிபதி சுஹார்ட்டோ தெரிவித்தார்.

பதவி விலகும் எண்ணத்தை இவர் பகிரங்கமாக வெளியிட்டது இதுவே முதல் தடவை (எ)

புஷ் வரவேற்பு

டெக்ஸாஸ் ஜன 5

எகிப்து ஜனாதிபதி முபாரக் இன்றைவேலுக்கு விஜயம் செய்யவிருப்பதை அமெரிக்காவின் புதிய ஜனாதிபதிஜோர்ஜ் புஷ் வரவேற்றிருக்கிறார்.

ஜனாப். முபாரக் விஜயம். மத்திய கிழக்குப் பிரச்சனைக்கு தீர்வு காண உதவும் என்று திரு. புஷ் தெரிவித்தார். (எ)

பகிஷ்கரிப்பு பற்றி ஆளுநர்

சென்னை ஜன5

சட்டசபைத் தேர்தலைப் புறக்கணிக்கும் உரிமை எவருக்கும் உண்டு.

ஆனால் அதைத் திணிக்கும் உரிமை எவருக்கும் கிடையாது

தமிழ்நாடு மாநில ஆளுநர் பி. வி. அலெக்ஸாண்டர் இதனை தெரிவித்தார்.

தமிழ் நாடு சட்டசபைத் தேர்தலைப் பகிஷ்கரிக்கும்படி வன்னியர் சமூகம் கோரிக்கை விடுத்திருப்பது தெரிந்ததே. (எ)

நடிக, நடிகையருக்கு வாக்களிக்கக் கூடாது! காஞ்சி ஜெயேந்திர ஸ்வாமிகள் அறிவிப்பு!

சென்னை, ஜன. 5

தமிழக சட்டசபைத் தேர்தலில் நடிக நடிகைகளுக்கு வாக்களிப்பதை நான் ஆதரிக்கவில்லை -என்று காஞ்சி ஸ்வாமிகள் சினியா நடிக, நடிகைகள் பற்றிக் கூறியது பற்றி அ.தி.மு.க.(ஜெ) அணித் தலைவி செல்வி ஜெயலலிதா கருத்து வெளியிட்டார்.

அவர் சொன்னதாவது:

காஞ்சி ஸ்வாமிகளின் கூற்று துரதிஷ்டவசமானது. ஸ்வாமிகள் மீது நான் அதிக மதிப்பு வைத்திருக்கிறேன்

ஸ்வாமிகளின் துரதிஷ்டவசமான இக் கூற்று குறித்து நான் கருத்து தெரிவிக்கவிரும்பவில்லை.

இப்படி செல்வி ஜெயலலிதா தெரிவித்தார். (எ)

துரதிஷ்டவசமான கூற்று என ஜெயலலிதா கருத்து

காஞ்சி ஜெயேந்திரா ஸ்வாமிகள் கூறியது, அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியது.

''வாக்காளர்கள் சினிமா நடிகர், நடிகையரை தேர்தலில் ஆதரிப்பது இந்திய பண்டைக் கலாசாரத்துக்கு ஒவ்வாதது இது எனது கருத்து – இப்படி காஞ்சி ஜெயேந்திர ஸ்வாமிகள் தெரிவித்தார்.

மேலும் அவர் சொன்னதாவது,

இந்து ஆலயங்களைப் பராமரிக்க தனியான சுயாட்சி அமைப்பு ஒன்றை நிறுவப்போவதாகவும் மதுவிலக்கை மீண்டும் கொண்டு வரப் போவதாகவும் இந்திரா காங்கிரஸ் அறிவித்தருக்கிறது இதை வரவேற்கிறேன்.

இக்கொள்கைகளை நான் ஆரம்பித்துள்ள ஜன கல்யாண் இயக்கத்திலுடையவையே— இப்படி காஞ்சி ஜெயந்திரர் சொன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா தயாரிப்புக்களின் பெற்று
✶ பைக்கட்டுக்குரிய பரிசு விபரம்
100 gm பற்பொடிபைக்கற் 10 அல்லது } 1 கொப்பி அல்லது
25 gm பற்பொடி பைக்கற் 50 } 1 ஸ்ரிக்கர்
25 ஊதுபத்தி பைக்கற்றுகளுக்கு 1 பைக்கற் ஊதுபத்தி
50 அண்ணா மோல்ட் லேபல் அல்லது } 1 கொப்பி அல்லது
50 அண்ணா டொபி லேபல் } ஸ்ரிக்கர்
வெகுமதிகளை நேரில் பெற்றுக்கொள்ள வேண்டிய இடம்:
அண்ணா தொழிலகம், இணுவில்.

உதயன்

06 - 01 - 1989 வெள்ளிக்கிழமை

வட பிரதேசத்துக்கான

தபால் அத்தியட்சகராக சேதுகாவலர் நியமனம்

யாழ்ப்பாணம், ஜன. 6

வடபிரதேசத்துக்கான புதிய தபால் அத்தியட்சகராக திரு எவ். எம். சேதுகாவலர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாண தபால் அத்தியட்சகராக மட்டக்களப்பில் கடமையாற்றிய இவர் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் யாழ்ப்பாணத்தில் கடமையேற்றுள்ளார்.

திரு. சேதுகாவலர் முன்னர் யாழ். தபாலக அத்தியட்சகராக கடமையாற்றியதும் குறிப்பிடத்தக்கது

வடபிரதேசதபால்அத்தியட்சகராக கடமையாற்றிய எஸ். ஏ. சி காமில் கொழும்பு தபாலகட்டுப்பாட்டுஅதிகாரியாகப் பதவியுயர்வு பெற்றுச் சென்றுள்ளார்.

இதேவேளை கிழக்கு மாகாண தபால் அத்தியட்சகராக திரு. வி. டபிள்யூ சோமசிறி நியமிக்கப்பட்டுள்ளார்

(ஒ-10)

பருத்தித்துறை இ. வங்கியில் நாளையும் மறுநாளும் நிவாரணம்

யாழ்ப்பாணம், ஜன 6

வடமராட்சியைச் சேர்ந்த 443 குடும்பங்களுக்கு நாளையும் நாளை மறுதினமும் பருத்தித்துறை இலங்கை வங்கிக்கிளையில் மீனக்குடியமர்தல் நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

நாளை நிவாரணம் பெறவிருக்கும் குடும்பங்களின் விவரம் வருமாறு:

★ புலோலி கிழக்கு — 533
★ வல்லிபுரக்குறிச்சி —212
★ மந்திகை — 207

நாளை மறுதினம் நிவாரணம் பெறவிருக்கும் குடும்பங்களின் விவரம் வருமாறு:

★ அல்வாய் வடக்கு —545
★ வியாபாரிமூலை

(ஒ-10)

வன்னியில் போட்டியிடும் 4 அமைப்பு முன்னணி வேட்பாளர்

வவுனியா, ஜன 6

வவுனியாவிலும் கூட்டணி தலைமையிலான நான்கு அமைப்பு முன்னணி வேட்பாளர் பட்டியலை தாக்கல் செய்தது.

வேட்பாளர் விபரம் வருமாறு:-

திரு. பி. எஸ். சூசைதாசன் (த வி கூ) திரு ஜெயசீலன் (த வி கூ) திரு இராசு கோணேஸ்வரன் (ஈ பி ஆர் எல் எவ்) திரு அந்தோனி இமானுவல் சில்வா (ஈ பி ஆர் எல் எவ் திரு அடைக்கலநாதன் என்று அழைக்கப்படும் செல்வம் (ரெலோ) திரு சந்திர ஹாசன் என்றழைக்கப்படும் செட்டி (ரெலோ) திரு ஞானப் பிரகாசம் (ஈ என் டி எல் எவ்) திரு ஜமாலினின் (ஈ என் டி எல் எவ்)

(ஒ)

A/L 89
PHYSICS
PAPER CLASS
ஆசிரியர்:
R. சத்தியசீலன்
B.M.C. முன்னேன்,
யாழ்ப்பாணம்
ஆரம்பம்:
07-01-89
Sat 7 15 a.m.
(111)

முஸ்லிம்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சாப்புத்தான் கோருகின்றோம்.

இது பற்றி புதிய ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளோம். நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை உண்டு.

ஜனாதிபதி தேர்தலில் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவிற்கு எமது ஒற்றுமை மூலம் சரியான பாடம் புகட்டியுள்ளோம்.

இது போன்ற பாடத்தை எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஆளும் கட்சியான ஐ. தே. க. விற்கு புகட்ட வேண்டும்.

எம்மிடையே பிரிவினைகள், கருத்து வேறுபாடுகள் இருக்கலாம் அதனை மறப்போம், மன்னிப்போம். எமது சமூக நலனுக்காக ஒரணியில் திரள்வோம் என்றார்.

(உ-21)

உடுகம்பொலவுக்கு 'பரிசு' இடமாற்றம்!

கொழும்பு, ஜன. 6

தென்மாகாண பிரதிப் பொலீஸ் மா அதிபர் திரு. உடுகம்பொல நேற்று இடமாற்றம் செய்யப்பட்டார்.

ஜனாதிபதி பிரேமதாஸாவின் உத்தரவின் பேரில் இந்த இடமாற்றம் இடம் பெற்றதாகக் கூறப்பட்டது.

தென் பகுதித் தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு திரு. உடுகம்பொல பொறுப்பாக இருந்து வந்தார்.

ஜே. வி. பி. இயக்கம் இதனால் இவர் மீது ஆத்திரம் கொண்டிருந்தது

திரு. உடுகம்பொலவின் காலி வாசஸ்தலத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் அவரின் தாயார் உட்பட சில உறவினர்களும் உயிரிழந்தனர்.

திரு. உடுகம்பொலவை ஜனாதிபதி இடமாற்றம் செய்திருப்பது, ஜே. வி. பி யுடன் அரசு பேச்சுக்களை நடத்துவதற்கு ஆயத்தநடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதை காட்டுவதாக அரசியல் அவதானிகள் கொழும்பில் கருத்து வெளியிட்டிருந்தனர்.

(உ-எ)

அமைதிப்படை ரோந்து

சுன்னாகம், ஜன 6

நாற்றுக்கணக்கான இந்திய அமைதிப்படையினர் நேற்றுக் காலை மருதனாமடம்- யாழ்ப்பாணம் வீதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டனர்

இதனால் பொதுமக்கள் மத்தியில் பதற்றம் நிலவியது. நண்பகலளவில் நிலைமை சீராகியது.

(ஒ-27)

அமைதி வேண்டியே தேர்தல் உடன்பாடு

ஈ.பி.ஆர்.எல்.எவ்.பிரமுகர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜன 6

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும், ஈ பி. ஆர். எல். எவ்வுக்கும் இடையில் கொள்கை ரீதியில் பெரும் வேறுபாடுகள் உண்டு. கொள்கை அடிப்படையில் நாம் ஒன்றிணைந்து செயற்பட வாய்ப்பில்லை.

ஆனால் மக்களுக்கு அமைதி ஏற்படுத்தித் தர வேண்டும் என்பதற்காகவே நாம் தேர்தல் கூட்டை ஏற்படுத்தினோம்

ஈ பி ஆர். எல். எவ். அமைப்பின் முக்கிய பிரமுகர் திரு கே யோக சங்கரி இப்படித் தெரிவித்தார்.

மக்களுக்கு இப்போது தேவைப்படுவது அமைதியும் புனர்வாழ்வும் தான்.

அமைதியை ஏற்படுத்துவதற்கு தமிழ் அமைப்புகள்மத்தியில் ஒற்றுமை உருவாக வேண்டும். அந்த ஒற்றுமையை உருவாக்க வேண்டும் என்பதற்காகவே நாம் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் தேர்தல் உடன்பாடு செய்தோம்.

தேர்தலில் தமிழ் மக்களின் ஒற்றுமையை வெளிப்படுத்தவே இந்த நடவடிக்கை.

இது போராட்ட காலம் அல்ல. போராட்டத்தின் போதுதான் கொள்கைகளில் விடாப்பிடியாக நாம் நிற்க வேண்டும். எனினும் அமைதி வேண்டி நாம் விட்டுக்கொடுத்து தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் கூட்டு ஏற்படுத்தி உள்ளோம்.

—என்றும் அவர் சொன்னார்

(உ)

ஆரம்ப ஆசிரிய சேவைக்கால முன் பயிற்சி பெறவிருப்போர்

யாழ்ப்பாணம், ஜன 6

ஆரம்ப ஆசிரிய சேவைக்கால முன் பயிற்சி பெறவுள்ள கணிதம், கணித விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்களின் பெயர்பட்டியல்கள் கல்வித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளன.

165 பட்டதாரி ஆசிரியர்களின் பெயர்ப்பட்டியல் வெளியிடப்பட்ட போதிலும் ஜனவரி 15 ஆம் திகதிக்கு பிறகு பயிற்சிக்கான திகதி அறிவிக்கப்படும் என்றும் கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

பட்டதாரி ஆசிரியர்களில் 50 பேரின் விவரம் வருமாறு;

1 நடராசா பிரபாகரன், கரவெட்டி, 2 பி. அருளழகன் கொழும்பு 04, 3 எவி. சர்வானந்தன் மீசாலை, 4 எஸ். குணாளன், யாழ்ப்பாணம். 5 கே நித்தியானந்தன், உடுப்பிட்டி, 6 எஸ். ஞானசேகரம், மண்டைதீவு, 7 வி. மயில்வாகனம், கைதடி. 8 ஆர். ஈ. மருதானந்த, ஊர்காவற்றுறை, 9 ஏ. தவகுமாரன் மானிப்பாய், 10 செல்வி எல் எம். அரியநாயகம், கரவெட்டி, 11 செல்விகே யோகலட்சுமி, நயினாதீவு. 12 செல்வி கே. சங்கரப்பிள்ளை, நயினாதீவு, 13 செல்வி பி. பொன்னம்பலம் காரைநகர், 14 செல்வி பி. ஐயாத்துரை, சங்காணை, 15 ஆர். பி. ராஜா. பண்டத்தரிப்பு. 16 செல்வி இரட்ணசபாபதி, கொக்குவில். 17 ரி. எவி. வரதன், சுண்டுக்குளி, 18 ஜி. பிரபாகரன், யாழ்ப்பாணம், 19 செல்வி எஸ் கனகரட்ணம், சுண்டுக்குளி, 20 கே. கேதீஸ்வரன், இளவாலை, 21 செல்வி எம். ஞானமலர், நயினாதீவு. 22 எஸ் குமாதரன் இளவாலை, 23 எஸ். யூ. சந்திரகுமாரன், இளவாலை, 24 செல்வி எஸ் இந்திராணி, சாவச்சேரி, 25 செல்வி பி. ஸ்ரீவதினி, கிரிமலை, 26 கே. பி. பரமநாதன் வேலணை, 27 எஸ் பகீதரன், நயினாதீவு, 28 செல்வி ஆர். விஷ்ணுசிங்கம், நயினாதீவு. 29 எஸ் வி. இருதயநாதன், சுன்னாகம், 30 எஸ். விக்னேஸ்வரமூர்த்தி, இணுவில், 31 செல்வி கே. மயில்வாகனம், காங்கேசன்துறை, 32 செல்வி ரி ரஞ்சனி, சுன்னாகம், 33 செல்வி ஏ. சுபராதாதேவி, வல்வெட்டித்துறை, 34 செல்வி எஸ். சிவகலை, கொடிகாமம், 35 எம். தி(illegible) பண்டை

2 எதிரி..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லும் பாதுகாப்புப் படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையில் மரண தண்டனை நிறைவேற்றத்தை நிறுத்திவைக்கும்படி ஜனாதிபதி வெங்கட்ராமனை பிரமுகர்கள் சிலர் சந்தித்துக்கேட்டுக் கொண்டனர்.

கேஹர்சிங் குற்றம் இழைத்தார் என்பதில் சந்தேகம் ஏற்பட்டிருப்பதாகவும் அவர்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர்.

இப்பிரமுகர்களில் உயர்நீதிமன்ற முன்னாள் நீதியரசர் ஒருவர் சோவியத் யூனியனில் இந்தியத்தூதராகப்பணியாற்றிய ராஜதந்திரி ஒருவர் ஆகியோரும் இருந்தனர். (உ-ஒ-எ)

சம்பள...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பகுதி 89 ஆம் ஆண்டு ஜனவரியில் இருந்தும் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

சம்பள உயர்வில் ஒரு பகுதி 1988 இல் வழங்கப்பட்டபோது ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு 1989 ஆம் ஆண்டுக்குரிய அடுத்த பகுதித் தொகையும் இரண்டு மாதங்கள் முன்கூட்டி 1988 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் சேர்த்து வழங்கப்பட்டது.

எனினும் இரண்டாவது பகுதித் தொகையை 89 ஆம் ஆண்டு ஜனவரியில் இருந்தே சேர்த்து வழங்கத் தற்பொழுது தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி திரு. பிரேமதாஸவே நிதி அமைச்சர் பொறுப்பையும் வகிப்பதைத் தொடர்ந்து புதிய முடிவு மேற்கொள்ளப்பட்டதாக அறிய வந்தது.

(அ-10)

இவ்வார நிவாரணம் இறுதியில் பெறுவோர்

யாழ்ப்பாணம், ஜன. 6

மாவிப்பாய் இலங்கை வங்கிக்கிளை. யாழ். ஸ்ரான்லி வீதி இலங்கை வங்கிக்கிளை ஆகியவற்றில் நாளை சனிக்கிழமையும், மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் நிவாரணப் பணம் வழங்கப்படவுள்ளது

நாளை ஸ்ரான்லி வீதி இலங்கை வங்கிக்கிளையில் நிவாரணம் பெறும் குடும்பங்களின் விவரம் வருமாறு:

★ நாவாந்துறை-361
★ அரியாலை மத்தி - 200
★ யாழ்-நகரப்பகுதி- 473
★ வண்ணார்பண்ணை வடமேற்கு - 339

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நிவாரணம் பெறுவோர் விவரம் வருமாறு:-

★ அத்தியடி — 374
★ ஈச்சமோட்டை — 127
★ முஸ்லீம் வீதி — 558
★ அரியாலை கிழக்கு — 107
★ வண்ணார்பண்ணை தெற்கு — 65

மாவிப்பாய் இலங்கை வங்கியில் நிவாரணம் பெறுவோர் விவரம் வருமாறு:-

★ மாவிப்பாய் — 372
★ பெரியவிளான் — 50
★ சுன்னாகம் — 07
★ மாசியப்பிட்டி — 657

நாளை சுன்னாகம் மக்கள் வங்கியில் நிவாரணம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை வருமாறு:-

★ உடுவில் வடக்கு — 360
★ உடுவில் தெற்கு — 388

இதே வங்கியில் நாளை மறுதினம் எட்டாம்திகதி நிவாரணம் பெறுவோர்:

★ புன்னாலைக்கட்டுவன் — 432
★ ஏழாலை வடக்கு — 08

(உ-10)

40 லட்சம் மாணவர்கள்

இரண்டு மாதங்களுக்குப் பின்னர் திறக்கப்பட்ட தென்னிலங்கைப் பாடசாலைகளுக்கு நேற்று சுமார் 40 லட்சம் மாணவர்கள் சென்றிருந்தனர்.

மரண அறிவித்தல்கள்

திரு. S. K. செல்லத்துரை

மன்னார் ஆண்பத்திரி வீதியைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் திரு S. K. செல்லத்துரை அவர்கள் 02 – 01 – 1989 அன்று சிவபதம் அடைந்து விட்டார். இவர் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், இராசம்மா, சந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஸ்ரீரங்கநாதன் (உரிமையாளர், ஸ்ரீ பேக்கவுஸ்), ஸ்ரீ பத்மநாதன் (உரிமையாளர், சிவா பேக்கவுஸ்), ஸ்ரீ ஜெகநாதன், ஸ்ரீ ஜெகநாயகி, ஸ்ரீ யோகநாயகி, ஸ்ரீ ரங்கநாயகி, ஸ்ரீ சிவநாயகி ஆகியோரின் அன்புத் தந்தையும், திலகரட்ணம் (ஆசிரியை), நிலா, ரபோலி, பிரகன்பதி ஆகியோரின் அருமை மாமனாரும், ரஜீவின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரது ஈமக்கிரியைகள் மன்னாரில் 04 - 01 - 1989 புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
S K. செல்லத்துரை
குடும்பத்தினர்

(8811)

திருமதி லெட்சுமிகாந்தம் வைத்தியலிங்கம்

திருமதி லெட்சுமிகாந்தம் வைத்தியலிங்கம் 04 01-89 இல் காலமானார். இவர் காலம் சென்ற பண்டிதர் சங்கரவைத்தியலிங்கத்தின் (முன்னாள் S.M C G R.) அன்பு மனைவியும், தையல்நாயகி, சங்கரநாதன் [Head guard], Dr. கயிலாசபதி [புத்தளம் Govt. Hospital], வாலாம்பிகை, கருணாம்பிகை, நீலாம்பிகை, அமுதாம்பிகை, சிவக்கொழுந்து, காலம் சென்ற மருகவேள், முத்துக்குமாரன் [Navigation Officer] ஆகியோரின் தாயாரும். கதிர்காமதாசன் [Audit examiner], செந்தித்துரை [Supdt - of surveys Jaffna]. செல்வச்சந்திரன் (மொழிபெயர்ப்பாளர்), இரத்தினசோதி [SLPA, Colombo]. சந்திரபதி [வாழைச்சேனை Paper factory], செல்வசுந்தரம் [Navigation Officer Canada], புஸ்பவதனா, கலைதேவி, கலா, பரிமளேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார் அன்னாரின் இறுதிக்கிரியைகள் வல்வெட்டித்துறை ஊறணி மயானத்தில் இன்று 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும்.

தகவல்: வை. கதிர்காமதாசன்
தெணி, வல்வெட்டித்துறை.

(8606)

ரோட்டேறியன் கந்தசாமி செல்வராஜா

கூழாவடி ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் உரும்பராயை வதிப்பிடமாகக் கொண்டவருமான முன்னாள் வெள்ளவத்தை நெசவாலை சப்பிளை மனேஜர் ரோட்டேறியன் க செல்வராஜா 3-1-89 அன்று காலமானார். அன்னார் காலஞ் சென்ற திரு. கந்தசாமியினதும் காலம் சென்ற திருமதி கனகம்மா கந்தசாமியினதும் அருமைப் புதல்வரும் காலம் சென்ற திரு. சிவகுருவினதும் திருமதி நல்லம்மா சிவகுருவினதும் அருமை மருகனும் கமலபவாலியின் அன்புக் கணவரும் பிரகதீசன், வாசீசன் (சென் ஜோஸ் கம்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆனந்தன் (உரிமையாளர் கொழும்பு மஸ்கோலின்ஸ், நித்தியானந்தன் (முன்னாள் வெள்ளவத்தை நெசவாலை) சாரதாமணி (இந்தியா). தேவிகாரணி, மல்லிகா ராணி (உடுவில் பிரதேச சபை நூலகர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், டாக்டர் நிர்மலானந்தன் (லண்டன்), டாக்டர் திருமதி ஸ்ரீனிவாசன் (லண்டன்), திருமதி வீரவாகு (கொழும்பு மெதடிஸ்ற் கல்லூரி) சசஜாணந்தன் (வன இலாகா, பிரமானந்தன் (இராணுவ இலாகா, திருமதி தர்மராஜா (லண்டன்) அற்புதானந்தன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் பேரின்பவதனியின் சித்தப்பாவும், மதுமதி, சுதாமதி (இந்தியா) பிரியதர்சினி, குணதர்சினி, சசிராஜ், ஜெயதர்சினி, விங்கன்ராஜ், கோபிராஜ் ஆகியோரின் மாமனாரும், பாலமுமார், யாழினி ஆகியோரின் பெரியதகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 7-1-89 சனிக்கிழமை 10 மணி அளவில் ஆனந்தகுடில் உரும்பராய் வடக்கில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்:

தகவல்:
குடும்பத்தினர்

"ஆனந்த குடில்"
உரும்பராய் வடக்கு,
உரும்பராய்.

(8817)

C.I.M.A. - Stage I - Batch No. II
May 1989
வாரநாள் புதிய பிரிவு வகுப்புக்கள் ஆரம்பம்
18 January 1989
உங்கள் பதிவுகளுக்கு:
NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14, St. Peters Lane,
Hospital Road,
JAFFNA.
C. I. M. A. Stage I, II & III A A T. Prelim, Inter &Finals I. D. P. M. Part I & II. I A B all stages வகுப்புகளும் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
(C/1221)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டெ[illegible] யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 298/3, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் [illegible] 06-01-1989 இல் அச்சிடப் பெறுவிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd, [illegible] Road, Jaffna on [illegible] January 1989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org